❖ பொருத்தமற்ற சொற்களை வெட்டி நீக்குக.

.............................................
தாய்/தந்தை / பாதுகாவலரின்
கையொப்பம்.

திகதி……………………….
பெயர் மற்றும் முகவரி (தெளிவான
எழுத்துக்களில்):…………………………………
திகதி: ..............................................................
சாட்சியாளரின் கையொப்பம்: …………………………………
பெயர் மற்றும் முகவரி(தெளிவான
எழுத்துக்களில்):…………………………………

17. **மொழித் தேவைப்பாடுகள்:** இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் மொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்து வதற்காக குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிகள் சட்டத்தின் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்துவதற்காக ஏற்கனவே விதிக்கப் பட்டுள்ள விதிமுறைகள் அல்லது இதன்பின்னர் விதிக்

கப்படவுள்ள விதிமுறைகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் செயற்பட வேண்டும்.

18. **ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துதல்:** விண்ணப் பதாரர்கள் தங்கள் ஆள் அடையாளத்தை உறுதிப் படுத்துவதற்கான ஆதாரங்களை சமர்ப்பிக்க வேண்டிய தேவை ஏற்படும். இதற்காக ஆட்பதிவு திணைக்களம் அல்லது தபால் மா அதிபரால் வழங்கப்பட்ட அடையாள அட்டை மற்றும் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட சாரதி அனுமதி பத்திரம் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

19. அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் தெரிவுசெய்யப்படின் அவ்விண்ணப்ப தாரியை விடுவிக்க முடியும் என்பதான உறுதிப்படுத் தலுடன் திணைக்கள தலைவர் ஊடாக விண்ணப்பப் படிவம் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

20. **விண்ணப்பங்கள் :** விண்ணப்பப்படிவம் கீழே காட்டப் பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் எழுதப்பட்டு, 2026.06.19 ஆம் திகதி பி.ப 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் ‘ஆளணி நிருவாக பணிப்பாளர் சபை, இலங்கை இராணுவ தலைமையகம், பாதுகாப்பு தலைமையக கட்டடத்தொகுதி, அக்குரேகொட வீதி, பத்தரமுல்ல’ எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்படிவம் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘இலங்கை இராணுவ நிரந்தர படையின் ஏனைய தொழில்முறை உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பப்படிவம்’ எனக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ப்படும் இறுதித்திகதி மற்றும் நேரத்துக்கு பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்களும் மற்றும் இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப் பாடுகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் இவ்இராணுவத்தலைமையகம் ஊடாக வழங்கப்படமாட்டாது. இவ்விடயம் தொடர்பான மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பங்களை www.army.lk/officers எனும் இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

21. விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் நகல் பிரதிகளை அனுப்புதல் வேண்டும்:

அ. பிறப்புச் சான்றிதழ்.
ஆ. கோரப்பட்டுள்ள கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.
இ. பட்டப்படிப்பு சான்றிதழ்.
ஈ. தொழில் அனுபவம் சார்ந்த சான்றிதழ்கள்.
உ. விளையாட்டு மற்றும் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளுக்கான சான்றிதழ்கள்.
ஊ. மேலும்,தேசிய அடையாள அட்டையின் நகல் பிரதி மற்றும் அண்மையில் பெறப்பட்ட 2"x 2½" அளவிலான நீல நிற பின்புலத்தையுடைய புகைப் படம் என்பன கிராம உத்தியோகத்தரினால் அல்லது சட்டத்தரணி ஒருவரினால் சான்றுப்படுத்தப்பட்டு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

22. நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல. மேலே குறிப் பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் ஆரம்பகட்ட தெரிவுக்கு உட்படுத் தப்படுவார்கள். அவ்வாறு தெரிவுசெய்யப்படும் விண் ணப்பதாரிகள் இராணுவத் தளபதி அவர்களால் விதிக் கப்படுகின்றவாறு பரீட்சைகளுக்குத் தோற்றுதல் வேண்டும். அப்பரீட்சைகளில் தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்படுகின்ற தெரிவுக் குழுவின் முன்னிலையில் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு இறுதியாக தெரிவு செய்யப்படுவார்கள்.

23. நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்படுகின்ற விண் ணப்பதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறுகின்ற இடம், நேரம் மற்றும் திகதி என்பன மின்னஞ்சல் முகவரி ஊடாக அறிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சை இலங்கை இராணுவ தலைமையகம், பாதுகாப்பு தலைமையக கட்டடத்தொகுதி, அக்குரேகொட வீதி, பத்தரமுல்ல எனும் இடத்தில் நடாத்தப்படும். விண்ணப்பதாரிகளின் பயணச் செலவுகள் அல்லது பிற செலவுகள் எதுவும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசினால் மீள செலுத்தப்படமாட்டாது.

24. விண்ணப்பதாரியொருவரை சிபாரிசு செய்ய எதிர் பார்க்கும் எவரேனும் ஒருவர் நற்சான்றிதழ் ஒன்றை வழங்குவதன் மூலம் மாத்திரமே மேற்கொள்ளலாமே தவிர விண்ணப்பதாரி ஒருவரை தெரிவுசெய்வதற்காக ஏதேனும் வகையிலான ஆதரவளித்தல் அல்லது விண்ணப்பதாரியின் தெரிவில் செல்வாக்குச் செலுத் துதல் என்பன பரிசீலனை சபையினர் உரிய விண் ணப்பதாரியை தகுதியற்றவராக தீர்மானிப்பதற்கு வழி வகுக்கும்.

25. ஆட்சேர்ப்புக்கு தகைமை பெறாத விண்ணப்பதாரி களுக்கு அது தொடர்பில் அறிவிக்கப்படமாட்டாது. அத்தகைய விண்ணப்பதாரர்களினால் முன்வைக்கப் படுகின்ற கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**குறிப்பு** : இந்த வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்படும். சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வாசகங்களுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படின் சிங்கள மொழிமூல வாசகம் மேலோங்கி நிற்கும்.

பீ கே ஜீ எம் எல் ரொட்ரிகோ ஆர்எஸ்பீ
சீடீஎப்-என்டீயூ பீஎஸ்சீ ஐஜி
லெப்டினன்ட் ஜெனரல்
இராணுவத் தளபதி

இலங்கைத் இரைப்படைத் தலைமையகம்
பாதுகாப்பு தலைமையகக் கட்டிடத் தொகுதி
அக்குரேகெடை வீதி
பத்தரமுல்லை.
2026, மாச்சு 27.

05-376

## ஆயுர்வேத மருத்துவ சபை

## சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

## பதிவாளர் (சிரேஷ்ட முகாமையாளர் – HM 1-1) பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல்

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் இயங்கும் மகரகம, நாவின்னாவில் அமைந்துள்ள ஆயுர்வேத மருத்துவ சபையில் மேற்கண்ட பதவிக்கு தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பதவி ஊழியர் சேமலாப நிதி (EPF) மற்றும் ஊழியர் அறக்கட்டளை நிதி (ETF) சலுகைகளுக்கு தகுதியானது.

பணியமர்த்தல் தகுதிகள்

- இலங்கை குடிமகனாக இருத்தல் வேண்டும்;
- பதவியின் கடமைகளை திறமையாக நிறைவேற்றவும், தீவின் எந்தப் பகுதியிலும் பணியாற்றவும் தேவையான உடல் மற்றும் மன ஆரோக்கியம் பெற்றிருத்தல் வேண்டும;
- சிறந்த குணநலன்களுடன் இருத்தல் வேண்டும்.

பதவி வெற்றிட எண்ணிக்கை – 01 (ஒன்று)

| | | |
|---|---|---|
| கல்வித் தகைமை | i. | 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது இணை நிறுவனம் வழங்கிய பின்வரும் தகுதிகளில் ஒன்றை பெற்றிருக்க வேண்டும்: BAMS (ஆயுர்வேத மருத்துவம் & அறுவை சிகிச்சை), BSMS (சித்த மருத்துவம் & அறுவை சிகிச்சை), BUMS (யுனானி மருத்துவம் & அறுவை சிகிச்சை), DSAMS அல்லது DSAC. மேலும், |
| | ii. | ஆயுர்வேத மருத்துவ சபையில் மருத்துவராக பதிவுசெய்யப்பட்டு பதிவை புதுப்பித்திருக்க வேண்டும். மேலும், |
| | iii. | தொடர்புடைய துறையில் முதுகலைப் பட்டம் (Masters) பெற்றிருக்க வேண்டும். மேலும், |
| | iv. | அரசுப் பணியில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட சேவையில் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம் இருக்க வேண்டும். |
| வயதெல்லை | | 40 வயதுக்கு குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். |
| சம்பள அளவுத் திட்டம் | | அரச நிர்வாக சுற்றறிக்கை எண் 01/2025 இன்படி HM 1-1 சம்பள குறியீடு. சம்பள அளவு: ரூ. 140,640 – 15 x 4,100 – 202,140. 2026.01.01 நிலவரப்படி ஆரம்ப சம்பளம்: ரூ. 123,019/-. EPF மற்றும் ETF சலுகைகளுக்கு தகுதியானது. |
| ஆட்சேர்ப்பு முறை | | நியமன அதிகாரியால் நியமிக்கப்படும் நேர்காணல் குழுவினால் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்படுவர். அதிக மதிப்பெண் பெற்றவர்களில் தகுதி வரிசைப்படி தேர்வு செய்யப்படும். பதவிக் காலம்: 3 ஆண்டுகள் (இரண்டாம் முறை நீட்டிக்கலாம்). அதிகபட்ச சேவைக் காலம்: 6 ஆண்டுகள். |
| நியமன அதிகாரி | | ஆயுர்வேத மருத்துவ சபையின் இயக்குநர் குழு |
| விண்ணப்பிக்கும் முறை | | இணைக்கப்பட்ட படிவத்தில் முழு சுயவிவரம் மற்றும் அனுபவ விவரங்களுடன் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பப் படிவத்தை நிரப்ப வேண்டும். கல்வி சான்றிதழ்களின் நகல்களை இணைக்க வேண்டும். உறையின் மேல் இடது மூலையில் “பதிவாளர் பணியமர்த்தல் – மூத்த மேலாளர் (HM 1-1) – ஆயுர்வேத மருத்துவ சபை” என குறிப்பிட்டு, 2026, யூன் 26 அல்லது அதற்கு முன்பாக பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். முகவரி: தலைவர், ஆயுர்வேத மருத்துவ சபை, நாவின்னா, மகரகம. |

வழிகாட்டுதல்களின்படி சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். ஆட்சேர்ப்பு தொடர்பான இறுதி முடிவு ஆயுர்வேத மருத்துவ சபையிடம் உள்ளது.

ஏ.எம்.ஜி.என். தீப்தி சுமனசேன,
தலைவர், ஆயுர்வேத மருத்துவ சபை,
ஆயுர்வேத ஆணையாளர் நாயகம்,
திகதி: 2026.05.20.

**ஆயுர்வேத மருத்துவ சபை**

**சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு**

(அலுவலக பயன்பாட்டிற்கு மட்டும்)

**சிரேஷ்ட முகாமையாளர் (HM 1-1) – ஆயுர்வேத மருத்துவ சபையின் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பப் படிவம்**

| | | |
|---|---|---|
| 1.0 | 1.1. முழுப் பெயர் | |
| | 1.2. முதலெழுத்துகளுடன் பெயர் | |
| 2.0 | 2.1. நிரந்தர முகவரி | |
| | 2.2. மாவட்டம் | |
| 3.0 | 3.1. பாலினம் | |
| | 3.2. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் | |
| 4.0 | 4.1. கைப்பேசி இலக்கம் | |
| | 4.2. நிலையான தொலைபேசி இலக்கம் | |
| 5.0 | 5.1. பிறந்த தேதி | |
| | 5.2. விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி நாளின்படி வயது | |
| 6.0 | 6.1. திருமணமானவர் / திருமணமாகாதவர் | |

7.0 **கல்வித் தகைமை**
**பட்டப்படிப்பு தொடர்பான விவரங்கள்**

**பி.ஏ.எம்.எஸ். B.A.M.S.** ☐ **பி.யூ.எம்.எஸ். B.U.M.S.** ☐ **பி.எஸ்.எம்.எஸ். B.S.M.S.** ☐ **டி.எஸ்.ஏ.எம்.எஸ். D.S.A.M.S.** ☐ **டி.எஸ்.ஏ.சி. D.S.A.C.**
**(தொடர்புடைய பெட்டியில் X குறியை இடவும்.)**

பல்கலைக்கழகம் / நிறுவனம் - ..............................................
பட்டம் செல்லுபடியாகும் திகதி - ..............................................
பிரயோகப் பயிற்சி பெற்ற காலம் - ..............................................
ஆயுர்வேத மருத்துவ சபையின் பதிவு எண் - .......................................... (பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை இணைக்கவும்)
ஆயுர்வேத மருத்துவ சபையின் பதிவு செய்த திகதி - ..............................................
**முதுகலைப் பட்டம் விவரங்கள்**
பெற்ற முதுகலைப் பட்டம் - ..................................................................
பல்கலைக்கழகம் / நிறுவனம் - ................................................................. (சான்றிதழின் பிரதியொன்றை இணைக்கவும்)
பட்டம் வழங்கப்பட்ட திகதி - ..................................................................
முதுகலைப் பட்டம் ஆயுர்வேத மருத்துவ சபையில் பதிவு செய்த திகதி - ...........................................................

8.0 **மொழித் திறன்**

| **மொழி** | **வாசிக்கும் திறன்** | **எழுதும் திறன்** | **பேசும் திறன்** |
|---|---|---|---|
| (அ) சிங்களம் | | | |
| (ஆ) தமிழ் | | | |
| (இ) ஆங்கிலம் | | | |
| (ஈ) பிற வெளிநாட்டு மொழிகள் | | | |

**9.0** அனுபவம்: (அரசுப் பணியில் அல்லது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட வேறு சேவையில் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம் இருக்க வேண்டும். அனுபவம் பெற்ற நிறுவனங்கள் மற்றும் காலகட்டம் ஆகியவற்றினை குறிப்பிட வேண்டும்.) ..........................................................................
..........................................................................................................................................................
..........................................................................................

10.0 **பிற தகுதிகள்**

…………………………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………..

11.0 **விண்ணப்பதாரர் உறுதிமொழி**

இந்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் என் அறிவுக்கு எட்டியவரை உண்மையானவை மற்றும் சரியானவை என்று அறிவிக்கிறேன். இதில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகவல் தவறானது அல்லது பொய்யானது என்று பணியமர்த்தலுக்கு முன்னரோ அல்லது பின்னரோ கண்டறியப்பட்டால், என்னுடைய வேட்புமனு அல்லது நியமனத்தை ரத்து செய்யும் உரிமை ஆயுர்வேத மருத்துவ சபையின் தலைவரிடம் உள்ளது என்பதை அறிவேன்.

இந்த பணியமர்த்தல் தொடர்பான நீதி விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு கட்டுப்பட்டு நடப்பதற்கும், அவ்விதிகளின்படி நான் தகுதியற்றவன் என கண்டறியப்பட்டால் பணியமர்த்தலுக்கு முன்னரோ அல்லது பின்னரோ என் வேட்புமனு அல்லது நியமனத்தை ரத்து செய்வதற்கு எடுக்கப்படும் எந்த முடிவுக்கும் உட்பட்டிருப்பதற்கும் நான் சம்மதிக்கிறேன்

………………………………………………………
விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி :…………………………………..

05-378

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**விவசாயத் திணைக்களம்**

**விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா கற்கைநெறியினை (NVQ 5) பயில்வதற்காக இலங்கை விவசாயப் பாடசாலைகளுக்கு மாணவர் ஆட்சேர்ப்புக்கான**

**திறந்த போட்டிப் பரீட்சை – 2026**

**Open competitive Examination for the enrollment of students for the National Diploma in Agricultural Production Technology (NVQ 5) in Sri Lanka School of Agriculture - 2026**

விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த இலங்கை விவசாயப் பாடசாலைகளில் நடைபெறும் “விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா (NVQ 5)” கற்கைநெறியினை பயில்வதற்காக 2027 / 2028 ஆம் கல்வியாண்டிற்கு மாணவர் சேர்க்கைக்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப்பத்திரம் கோரப்படுகின்றது. இப் பரீட்சையானது விவசாயத் திணைக்களத்தின் பரீட்சை பிரிவினால் 2026, ஒற்றோபர் மாதத்தில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் சில பிரதான நகரங்களில் அமைக்கப்படவுள்ள பரீட்சை நிலையங்களில் நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. **விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா கற்கை நெறி**

2.1 விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா கற்கைநெறியானது மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் இக் கற்கைநெறிக்கு தேசிய தொழிற்கல்வி தகைமை (NVQ 5) மட்டம் 5 வழங்கப்படுகின்றது.

2.2 இக் கற்கைநெறியானது விவசாயத் திணைக் களத்தின் அநுராதபுரம், பிபிலை, லபுதுவை, பாலமுனை, பரந்தன், வாரியபொல ஆகிய விவசாயப் பாடசாலைகளில் ஆண், பெண் இரு பாலருக்கும் பொதுவான கற்கைநெறியாக மேற் கொள்ளப்படுகின்றது.

2.3 இக்கற்கை நெறிக்கான காலம் 1 ½ வருடங்களாகும். இதில் ஒரு வருடம் விவசாயப் பாடசாலைகளில் குறிப்பிட்ட பாடத்திட்டத்திற்கமைய பயிற்சி வழங்கப்படும். மேலும் தேசிய பயிலுநர் தொழிற் பயிற்சி அதிகாரசபையின் (NAITA) மேற்பார் வையின் கீழ் 06 மாத காலத்திற்கு தொழில் சார் பயிற்சி ஒன்றினை குறிப்பிட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொள்வது கட்டாயமாகும்.

2.4 ஆங்கில மொழியில் மட்டும் நடத்தப்படும் இக் கற்கை நெறியானது முழு நேர உள்ளகக் கற்கை நெறியாகும்.

2.5 மாணவர் சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் கற்கை நெறி யினை பயில்வதற்கு தகைமை பெற்றவர்களின் தகைமைகளின் உண்மைநிலையானது நேர்முகப் பரீட்சை மூலம் பரீட்சிக்கப்பட்டதன் பின்பே விவசாயப் பாடசாலைகளில் சேர்த்துக் கொள்வ தற்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

2.6 இக்கற்கை நெறிக்கு க.பொ.த. (உயர் தர) தகைமை யின் அடிப்படையிலும் மற்றும் விவசாயத் துறை யில் தேசிய தொழிற் தகைமை நிலை 04 (NVQ Level 04) கற்கை நெறியினை பயின்று பெற்றுக் கொண்ட தகைமையின் அடிப்படையிலும் விண்ணப்பிக் கலாம்.

03. **கற்கைநெறிக்கு அனுமதி பெறுவதற்கான தகைமைகள்** :

3.1 **க.பொ.த. (உயர் தர) தகைமையின் அடிப்படையில் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு**

3.1.1 கல்வித் தகைமைகள் :

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங் களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங் கிலம் ஆகிய பாடங்கள் உள்ளடங்களாக மொத்த மாக ஆறு (06) பாடங்களில் சித்தி யடைந் திருக்க வேண்டும்.

மேற்கூறிய இரண்டு தடவைகளில் அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகளில் ஆங்கிலப் பாடத்திற்கு குறைந்தது சாதாரண சித்தி (S) பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

க.பொ.த. உயர் தர பரீட்சையில் உயிரியல் பிரிவில் உயிரியல், இரசாயனவியல் பௌதீக வியல் / விவசாயம் ஆகிய மூன்று பாடங்களுக்கு தோற்றி அதில் ஆகக்குறைந்தது ஒரு பாடமேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

க.பொ.த. உயர் தர பரீட்சையில் தொழில் நுட்பவியல் துறையில் கல்வி பயின்று உயிரியல் தொழில்நுட்பம் / பொறியியல் தொழில்நுட்பம், தொழில்நுட்பவியல் துறைக்கான விஞ்ஞானம், விவசாயம் ஆகியவற்றில் மூன்று பாடங்களுக்கு தோற்றி அதில் குறைந்தது ஒரு பாடமேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**முக்கியம் -** க.பொ.த. உயர் தர பரீட்சையில் உயிரியல் துறை மற்றும் தொழில்நுட்பவியல் துறை ஆகிய பிரிவுகளில் மேலே குறிப்பிடப் பட்டுள்ள மூன்று பாடங்களின் சேர்க்கைகளும் தவிர்ந்த வேறேதும் பாடமொன்றினை கல்வி பயின்றிருந்தால் தகைமையாக ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

3.1.2 **வயது :**

விண்ணப்பதாரிகள் 2026.06.30 ஆம் திகதி யன்று 18 வயதிற்குக் குறையாமலும் 25 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண் டும். (அதனடிப்படையில் வயது தொடர்பான தகைமையினை பூரணப்படுத்தும் விண்ணப்ப தாரியின் பிறந்த தினமானது 2008.06.30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராகவோ 2001.06.30 ஆம் திகதி அல்லது அதற்கு பின்ன ராகவோ இருத்தல் வேண்டும்.)

3.2 விவசாயத் துறையில் தேசிய தொழில் சார் தகைமை மட்டம் 4 (NVQ Level 4) பாடநெறி ஒன்றினை பயின்று சான்றிதழைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகளுக்கு

3.2.1 **கல்வித் தகைமைகள்:**

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உள்ளடங்களாக மொத்தமாக ஆறு (06) பாடங்களில் சித்தி யடைந்திருக்க வேண்டும்.

மேற்கூறிய இரண்டு தடவைகளில் அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகளில் ஆங்கிலப் பாடத்திற்கு குறைந்தது சாதாரண சித்தி (S) பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு விவசாயத் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழில்சார் தகைமை மட்டம் 4 (NVQ 4) இல் கீழே தரப்பட்டுள்ள பாடநெறியொன்றை பயின்று மூன்றாம் நிலை தொழிற் கல்வி ஆணைக் குழுவின் மூலம் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை மட்டம் 4 (NVQ 4) சான்றி தழினை பெற்றிருத்தல்

- நாற்றுமேடை அபிவிருத்தி உதவியாளர்
- வெளிக்கள உதவியாளர் (விவசாயம்)
- நில அலங்கார வினைஞர்
- நில அலங்கார அபிவிருத்தி உதவியாளர்

அல்லது

விவசாயத் துறையுடன் தொடர்பான விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில் தகைமை 04 (NVQ 4) இல் வேறு ஏதேனும் பாடநெறி ஒன்று

3.2.2 **வயது :**

விண்ணப்பதாரிகள் 2026.06.30 ஆம் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதனடிப் படையில் வயது தொடர்பான தகைமையினை

பூரணப்படுத்தும் விண்ணப்ப தாரியின் பிறந்த தினமானது 2008.06.30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராகவோ 1991.06.30 ஆம் திகதி அல்லது அதற்கு பின்னராகவோ இருத்தல் வேண்டும்.)

3.3 இக்கற்கைநெறியானது விவசாயச் செயற்பாடு களுடன் தொடர்பான செய்முறை பயிற்சிகளை உள்ளடக்கியது. எனவே இக்கற்கைநெறியினை கற்பதற்கு நீங்கள் உடலியல் மற்றும் மனநல ரீதியாக நல்ல தேகாரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும். கற்கை நெறியில் சேரும் தருணத்தில் கர்ப்பமாக இருந்தால் கற்கை நெறியில் சேர்த்துக் கொள்ளப்படாமைக்கும் கற்கை நெறியில் சேர்ந்த பின்னர் கர்ப்பமாவது கற்கை நெறியில் இருந்து விலக்குவதற்கும் காரணமாக அமையும்.

(இக் கற்கை நெறிக்கு நீங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டால் உடல் மற்றும் உள ரீதியாக நல்ல தேகாரோக்கியத்துடன் இருப்பதாக அரச வைத்தியர் ஒருவரிடம் பெற்றுக் கொண்ட வைத்திய சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும்.)

3.4 இக்கற்கைநெறியினை பயில்வதற்கு மதகுருமார் தகுதியுடைவராகமாட்டார்கள்.

3.5 அரசாங்க சேவையில் தொழில் புரிபவர்கள் இப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதி யுடையவராக மாட்டார்.

04. **பரீட்சை நடைபெறும் நிலையங்கள் மற்றும் பரீட்சை நடைபெறும் மொழி**

4.1 விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா பாடநெறிக்காக இலங்கை விவசாயப் பாடசாலைக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் மட்டும் நடாத்தப்படுவதுடன் பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்று வதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது.

4.2 போட்டிப் பரீட்சை கீழே தரப்பட்டுள்ள பரீட்சை நிலையங்களில் 2026, ஒற்றோபர் மாதத்தில் நடத்தப்படும். விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்யும் பொழுது நீங்கள் பரீட்சைக்கு தோற்றுவ தற்கு விருப்பமுடைய பரீட்சை நிலையம் மற்றும் அதற்குரிய இலக்கத்தினை குறிப்பிட்ட இடத்தில் பதிவு செய்ய வேண்டும். தெரிவு செய்யப்பட்ட விடயங்கள் பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது.

| *பரீட்சை நிலைய இல.* | *பரீட்சை நிலையம்* |
|---|---|
| 1 | இலங்கை விவசாயப் பாடசாலை, குண்டசாலை |
| 2 | இலங்கை விவசாயப் பாடசாலை, பெல்வெஹெர |
| 3 | இலங்கை விவசாயப் பாடசாலை, லபுதுவ |
| 4 | இலங்கை விவசாயப் பாடசாலை, அநுராதபுரம் |
| 5 | இலங்கை விவசாயப் பாடசாலை, பாலமுனை |
| 6 | இலங்கை விவசாயப் பாடசாலை, வாரியபொல |
| 7 | இலங்கை விவசாயப் பாடசாலை, பரன்தன் |
| 8 | இலங்கை விவசாயப் பாடசாலை, வவுனியா |

4.3 குறிப்பிட்ட பரீட்சை நிலையமொன்றிக்கு போதி யளவு எண்ணிக்கையான பரீட்சாத்திகள் விண் ணப்பிக்காதவிடத்து அல்லது வேறு ஏதேனும் செயன்முறை பிரச்சினைகள் ஏற்படுமாயின் பரீட் சார்த்திகள் விண்ணப்பித்துள்ள பரீட்சை நிலை யத்திற்கு பதிலாக வேறு ஒரு பரீட்சை நிலையம் விவசாயத் திணைக்களத்தினால் நியமிக்கப்படும்.

5. **விண்ணப்பப்படிவங்கள் கோரல்:**

5.1 இப் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப் பத்திரம் நிகழ்நிலை (online) முறை மூலம் மேற்கொள்ளப்படும். விவசாயத் திணைக்களத்தின் www.doa.gov.lk என்ற இணையத் தளம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

5.2 பரீட்சைக்கான கட்டணம் ரூபா 1300.00 ஆகும். மக்கள் வங்கி பேராதனை கிளையில் விவசாய பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் 057100139027201 கொண்ட வருமானக் கணக் கிற்கு பரீட்சை கட்டணத்தை செலுத்தி விண்ணப் பதாரியின் பெயரில் பற்றுச்சீட்டினை பெற்றுக் கொள்ள வேண்டும். அப்பற்றுச் சீட்டு வழங்கப் பட்ட திகதி, கிளை மற்றும் இலக்கம் விண்ணப்பப் பத்திரத்தில் குறிப்பிட வேண்டும்.

5.3 விண்ணப்பப்படிவம் ஆங்கிலத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பப்படிவம் தொடர்பான சந்தேகங்களுக்கும் மேலதிக விபரங் களுக்கும் 081–2388340 அல்லது 081–2388341 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

5.4 பரீட்சைக்கு செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணத் திற்காகவும் மீளளிக்கவோ, வேறு ஏதேனும் பரீட் சைக்கு மாற்றி அளிக்கவோ முடியாது.

5.5 விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நாளான 2026.06.30 ஆந் திகதி நள்ளிரவு 12.00 மணிக்கு பின்னர் விண்ணப்பப்படிவம் இணையத் தளத்திலிருந்து அகற்றப்படும்.

5.6 நிகழ்நிலை (online) முறையில் பூரணப்படுத்திய விண்ணப்பப்பத்திரத்தின் கடின நகல் (Hard copy) பெற்றுக் கொள்ளல் கட்டாயமாகும்.

5.7 கடின நகல் (Hard copy) இல் விண்ணப்பதாரியின் கையொப்பத்துடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள இணைப்புகளுடன் கட்டாயமாக பதிவுத் தபாலில் 2026.07.06 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் "பணிப்பாளர் (விரிவாக்கற் பயிற்சி) விரிவாக்கற் பயிற்சி நிலையம், விவசாயத் திணைக்களம், பேராதனை" என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தேசிய டிப்ளோமா கற்கை நெறி (NVQ-5)" என குறிப்பிட வேண்டும்.

**இணைப்பு :**

அ. க.பொ.த. (உயர் தர) தகைமைகளின் அடிப் படையிலான விண்ணப்பதாரிகளுக்கு :

i. க.பொ.த. (சாதாரண) பரீட்சை மதிப்பெண் சான்றிதழ் பிரதி
ii. க.பொ.த. (உயர்தர) பரீட்சை மதிப்பெண் சான்றிதழ் பிரதி
iii. பிறப்புச் சான்றிதழ் பிரதி
iv. தேசிய அடையாள அட்டை பிரதி
v. பணம் செலுத்திய பற்றுச் சீட்டு

ஆ. தேசிய தொழிற் தகைமை மட்டம் 4 (NVQ-4) பாடநெறியினை நிறைவு செய்து விண்ணப்பம் கோரப்படும் இறுதி திகதிக்கு சான்றிதழ் பெற்றவர்கள்

i. க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சை மதிப்பெண் சான்றிதழ்
ii. தேசிய தொழிற் தகைமை மட்டம் 4 (NVQ-4) சான்றிதழ்
iii. பிறப்புச் சான்றிதழ் பிரதி
iv. தேசிய அடையாள அட்டை பிரதி
v. பணம் செலுத்திய பற்றுச் சீட்டு

குறிப்பிட்ட தினத்தின் பின்னர் கிடைக்கும் விண் ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் பிரமாதமாகும் அல்லது காணாமல் போகும் விண்ணப்பபடிவங்கள் தொடர்பாக விவசாயத் திணைக்களம் பொறுபேற்காது.

5.8 5.7 இல் குறிப்பிடப்பட்டுள்ள சகல இணைப்புக் களினதும் கடின நகல் பிரதியானது விவசாயத் திணைக்களத்திற்கு கிடைக்காவிடின் பரீட்சை எழுதுவதற்கானதகுதியை இழந்ததாகக் கருதப்படும். எனவே குறித்த தினத்தில் அல்லது அதற்கு முன்னர் குறிப்பிட்ட படிவத்தினை அனுப்பி வைக்க வேண்டும். மேலும் முழுமையாக நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய சீட்டு ஆகியவற்றின் பிரதியினை தம்வசம் வைத்திருப்பது பிரயோசனமானதாக அமையும்.

6. அடையாளத்தை உறுதி செய்தல் :

6.1 பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தினுள் அவர்கள் தோற்றும் அனைத்து பாடங்களுக்கும் பரீட்சை நிலையப் பொறுப்பாளர் திருப்தியடையும் வகையில் தமது அடையாளத்தை உறுதிபடுத்துவதற்கு கீழே தரப்பட்டுள்ள ஆவணங்களில் ஏதாவது ஒரு ஆவணத்தை மட்டும் கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும்.

i. தேசிய அடையாள அட்டை
ii. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
iii. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்

07. **பரீட்சை முறைமை :**

7.1 போட்டிப் பரீட்சை விவசாயம் மற்றும் விவேகப் பரீட்சை என்பன முறையே 01 மணித்தியாலம் என்ற வகையில் நடைபெறுவதுடன், ஒவ்வொரு விடயத்திற்கும் 100 மதிப்பெண்கள் என்ற வகையில் வழங்கப்பட்டு இறுதி மதிப்பெண்ணாக 200 இற்கு பெறப்பட்ட மதிப்பெண்கள் அறிவிக்கப்படும்.

7.2 ஒவ்வொரு விடயத்திலும் சித்தியடைவதற்கு ஆகக் குறைந்தது 30% மதிப்பெண்கள் பெற வேண்டும்.

7.3 **பாடவிதானம்:**

**விவசாயம்:** க.பொ.த. (சாதாரண தரம்) விவசாயப் பாடத்திற்கமைவாகவும் விவசாயத் துறையுடன் தொடர்பான பொதுவான விடயங்களை உள்ளடக்கியதாகவும் தயாரிக்கப்பட்ட பல்தேர்வு வினாக்களை கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**விவேகப் பரீட்சை :**

இவ்வினாப்பத்திரமானது ஒழுங்கமைப்பு, தொடர்பு காணல், ஊகித்தல், ஒப்பிடுதல், பகுத்தறிதல் போன்ற திறன்களை மதிப்பிடும் விதத்தில் தயாரிக்கப்படும். இது பல்தேர்வு வினாக்கள் 50 இனை கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

7.4 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண் ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளுக்கு அமைவாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயது எல்லைக்கு உட்பட்ட, விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பாக உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டின் கடின நகலை சரியான முறையில் இணைத்து, அத்துடன் 5.7 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய இணைப்புக்களையும் இணைத்து பூரணப் படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பி

வைக்கும் சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை அனுமதிப் பத்திரம் அனுப்பி வைக்கப்படும். அது தொடர்பாக குறுஞ் செய்தி மூலம், விவசாயத் திணைக்களத்தின் பரீட்சைப் பிரிவின் மூலம் அறிவிக்கப்படும்.

பரீட்சைக்கான அனுமதி பத்திரம் தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் இருக்குமாயின் அது தொடர்பான விபரங்களை 081-2388085 அல்லது 081-2388059 என்ற இலக்கம் மூலம் அறிந்து கொள்ளலாம்.

7.5 விண்ணப்பப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரியை தொடர்பு கொள்ளும் வழிகளான ஈமெயில் முகவரி, Whatsapp இலக்கம் மற்றும் தொலைபேசி இலக்கம் போன்றவற்றை ஆட்சேர்ப்பு நடவடிக்கை நிறைவு பெறும்வரை மாற்றாமல் தொடர்ந்தும் நடைமுறையில் வைத்திருக்க வேண்டும். அந்த இலக்கங்களை மாற்றுவதன் மூலம் ஏற்படும் சங்கடங்களுக்கு விவசாயத் திணைக்களம் பொறுப்பேற்க முடியாது.

7.6 பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலை அதிபர் ஒருவரால், பிரிவிற்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர் ஒருவரால், சமாதான நீதவான் ஒருவரால், சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவரினால், சட்டத்தரணி ஒருவரினால், பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால், முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரால், அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் நிரந்தர பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரினால், பௌத்த விகாரை ஒன்றின் விகாராதிபதி அல்லது பிரதான மதகுரு ஒருவரினால், ஏனைய மத வழிபாட்டுத்தளம் ஒன்றிற்கு பொறுப்பான பிரதான மதகுரு அல்லது விஷேட நிலையில் உள்ள மதபோதகர் ஒருவரினால் உறுதிப்படுத்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

7.7 விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு தோற்றும் முதல் சந்தர்ப்பத்திலேயே தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரங்களை பரீட்சை நிலையத்தின் பிரதான மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

7.8 பரீட்சையினை நடாத்தல், பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக விவசாயத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் நடைமுறைப் படுத்தப்படும் சட்ட திட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் கட்டுப்படல் வேண்டும். அத்துடன் இச்சட்டத் திட்டங்களை மீறும் விண்ணப்பதாரிகள் விவசாயத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டியவராவார்.

7.9 போட்டிப் பரீட்சையில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் விவசாயத் திணைக்கள இணையத் தளத்தில் வெளியிடப்படும் இம்மதிப் பெண்களின் அடிப்படையில் மற்றும் தெரிவு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அதிக மதிப்பெண்களைப் பெற்றவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சையில் கல்வித் தகைமையும் மற்றைய தகைமைகளும் பரீட்சிக்கப்படுவதுடன் நேர்முகப் பரீட்சைக்கு எதுவித மதிப்பெண்களும் வழங்கப்பட மாட்டாது. விவசாயப் பாடசாலைகளுக்கு தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை விடவும் அதிகமான எண்ணிக்கையான மாணவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

7.10 பரீட்சார்த்தியொருவருக்கு இவ் எழுத்து மூல பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அளித்தல் அல்லது நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அழைக்கப்படுதல் போன்றவற்றின் காரணமாக அவர் தகைமையுடையவர் எனக் கருத்திற் கொள்ள முடியாது. ஒரு பரீட்சார்த்தி பரீட்சைக்கு முன்னரோ அல்லது பின்னரோ அல்லது பரீட்சையின் எந்நிலையிலுமோ இவ்வறிவித்தலுக்கு அமைவாக தகைமையற்றவர் எனக் கண்டறியப்பட்டால் அவரின் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமை இரத்துச் செய்யப்படும்.

7.11 எழுத்துப் பரீட்சைக்கு அல்லது நேர்முகப் பரீட்சைக்கு அல்லது இவ்விரு பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு அரசினால் எந்தவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

08. **தெரிவு செய்யப்படும் முறை :**

8.1 இப் பாடநெறிக்கு சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையில் 90% க.பொ.த. (உயர் தர) தகைமைகளின் அடிப்படையிலும் 10% தேசிய தொழிற் தகைமை 4 (NVQ level 4) தகைமையின் அடிப்படையிலும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

8.2 குறித்த வருடத்தில் ஒவ்வொரு விவசாயப் பாடசாலைக்கும் தெரிவு செய்யப்படும் ஆண், பெண் மாணவர்களின் எண்ணிக்கை குறிப்பிட்ட பாடசாலைகளில் ஆண், பெண் விடுதிகளில் உள்ள இடவசதி மற்றும் அப்பாடசாலைகளில் கற்கை நெறிக்கான வசதிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள். எனவே மாணவர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சையின் மதிப்பெண் ஆண், பெண் விண்ணப்பதாரிகளிடையே மாறுப் படகூடும்.

8.3 யாரேனும் ஒரு விண்ணப்பதாரி இப்பாடநெறியில் இணைந்து கொள்வதற்காக மேற்கொள்ளும் முறையற்ற செல்வாக்கு மற்றும் பிழையான செயற்பாடுகள் அவர் இப்பாடநெறியை தொடர்வதற்கு தகைமையற்றவராவதற்கு காரணமாக அமையும்.

8.4 விவசாயக் கல்லூரியில் பாடநெறியினை தொடருவதற்கான தகைமைகளை கொண்ட விண்ணப்பதாரிகள் விவசாயக் கல்லூரிகளுக்கு இணைத்து கொள்ளப்பட்ட பின்னர் அவர்களுக்கு விவசாயக் கல்லூரிகளை மாற்ற முடியாது.

8.5 இப்பாடநெறியானது முழுமையான தங்குமிட வசதியுடன் கூடிய பாடநெறி ஒன்றாகையால் இப்பாடநெறியினை கைவிட்டு செல்லும் எவருக்கும் மீண்டும் இப்பாடநெறியில் இணைந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

8.6 பாடநெறிக்கு மாணவர்களை இணைத்து கொள்வது தொடர்பில் விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.

8.7 சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் வெளியிடப்படும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது ஒவ்வாமைகள் காணப்படுகின்றது என கண்டறியப்படும் சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

2026.05.21.

விவசாயத் திணைக்களம்,
பேராதனை.

05-383

---

**கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) வகுதி 02 தரம் I, II மற்றும் III உத்தியோகத்தர்களுக்கான 1, 2 மற்றும் 3 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2026**

**சேவை வகுதி**

1. ஆவண உதவியாளர்
2. ஆய்வுகூட உதவியாளர்
3. பாடசாலை தரவுக் குறிப்பாளர்
4. மாணவர் விடுதிக் காப்பாளர் (பெண்/ ஆண்)
5. மாணவர் விடுதி உதவிக் காப்பாளர் (பெண்/ ஆண்)
6. ஸ்டீரியோ வகை இயந்திர இயக்குனர்கள்

மேற்படி பதவிகளுக்குரித்தான உத்தியோகத்தர்களுக்காக அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால், 2026, செத்தெம்பர் மாதத்தில் நடாத்தப்படும் என இத்தால் அறியத் தரப்படுகின்றது.

விண்ணப்பப் படிவம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doents.lk இணையத் தளத்தில் “ Our Services” இன் கீழுள்ள “ Online Applications - Recruitment Exams /E.B. Exams” இல் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், விண்ணப்பப் படிவங்களை நிகழ்நிலை ஊடாக (Online) மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை மூலமாக விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக் கொள்ளும் பணிகள் 2026, மே மாதம் 29 ஆந் திகதியன்று மு.ப. 09.00 மணிக்கு ஆரம்பமாகும் என்பதுடன், 2026, யூன் மாதம் 30 ஆந் திகதியன்று இரவு 09.00 மணிக்கு நிறைவடையும். விண்ணப்பப் படிவங்களை நிகழ்நிலை மூலமாக சமர்ப்பித்த பின்னர் அதனை பதிவிறக்கம் செய்து அச்சுப் பிரதியின் உரிய பகுதிகளை கையெழுத்துக்களால் பூரணப்படுத்தி, விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தி, உரிய நிறுவனத் தலைவரது உறுதிப்படுத்துகையுடன் விண்ணப்ப இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபால் மூலமாக அனுப்பிவைக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை அனுப்பிவைக்கும் பணியினை இறுதித் திகதி வரையில் தாமதிப்பதால் ஏற்படக் கூடிய எந்தவொரு பாதகமான நிலைமைகளுக்கும் விண்ணப்பதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

02.

i. இப் பரீட்சையானது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் என்பதுடன் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் அவரால் விதிக்கப்படும் சட்ட விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் இணங்கி செயற்படல் வேண்டும்

ii. பரீட்சார்த்தியாகுவதற்காக விதிக்கப்பட்டுள்ள சட்ட விதிமுறைகள் வர்த்தமானப் பத்திரிகையில் பிரத்தியேகமாக பிரசுரிக்கப்பட்டுள்ளன. இந்தச் சட்டங்களை மீறும் பட்சத்தில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனை ஒன்றிற்கு பரீட்சார்த்திகள் உட்பட நேரிடும்.

iii. இப் பரீட்சைக்கு கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் கீழ் நியமனம் பெற்றுள்ள மேலே குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்

மாத்திரமே இப் பரீட்சைக்காக விண்ணப்பிக்க முடியும்.

03. **பரீட்சைக் கட்டணம்:-**

பரீட்சைக் கட்டணம் ரூ. 500 ஆகும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும் போது நிகழ்நிலை முறைமை யூடாக வழங்கப்படும் கீழ்வரும் கட்டணம் செலுத்தும் செயன்முறைகளின் கீழ் மாத்திரமே கட்டணம் செலுத்தப் படல் வேண்டும்.

I. எந்தவொரு வங்கியினதும் கடன் அட்டை ஊடாகவும் (Any Bank Credit Card)
II. இணையள வழி கொடுப்பனவு வசதிகளுடன் கூடிய எந்தவொரு டெபிட் அட்டை ஊடாகவும் (Any Bank Debit Card With the Facility of Internet Transactions)
III. இலங்கை வங்கி நிகழ்நிலை வங்கி முறையூடாகவும் (Online Banking Method of Bank of Ceylon )
IV. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையூடாகவும் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு:-

(அ) மேற்படி முறைகளூடாக கட்டணம் செலுத்தும் விதம் தொடர்பில் ஆலோசனைகள் இணையத் தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப ஆலோசனைகளின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கட்டணம் கிடைக்கப் பெற்றமை தொடர்பில் குறுந் தகவல் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் செய்து மூலம் அறியத் தரப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத் தொகையையும் செலுத்த வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணத்தை குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்தியுள்ள விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப் பட்ட கட்டணம் செலுத்தும் முறைகளூடாக கட்டணம் செலுத்தும் போது ஏற்படக்கூடிய கோளாறுகள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்புக் கூறாது.

(இ) பரீட்சைக்காக செலுத்திய தொகை எந்தவொரு காரணத்திற்காகவும் திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சை ஒன்றிற்கு மாற்றம் செய்யப்படவோ மாட்டாது.

04. **விண்ணப்பப்படிவங்கள் :**

நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் மாத்திரமே பூரணப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பதாரரால் நிகழ்நிலை மூலமாக சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதி மற்றும் பதிவுத் தபால் மூலமாக அனுப்பிவைக்கப்படும் அச்சுப் பிரதி (Printout) ஆகிய இரண்டும் பரீட்சைத் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்ற பின்னர், குறித்த மென் பிரதி மற்றும் அச்சுப் பிரதி ஆகியன சரிபார்க்கப்பட்டு (Verify) உறுதிப்படுத்தப்படும் என்பதுடன், செல்லுபடியாகும் விண்ணப்பப் படிவமாக திணைக்களத்தினால் ஏற்றுக் கொண்டமை/ ஏற்றுக் கொள்ளப்படாமை தொடர்பில் நிகழ்நிலை முறைமையினுள் பிரவேசிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுந் தகவல் (SMS) மூலமோ அல்லது மின்னஞ்சல் முகவரிக்கோ (E -mail) அறியத் தரப்படும். நிகழ்நிலை விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்த முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள ஆலோசனைப் படிவத்தைப் (Instructions) பதிவிறக்கம் செய்துகொள்ளவும். விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தும் போது குறித்த ஆலோசனைகளை கட்டாயம் பின்பற்றவும். விண்ணப்பப் படிவத்தின் அச்சுப் பிரதியினைப் பெற்றுக் கொண்ட பின்னர் அதில் செய்யப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியாகும் திருத்தமாக கருதப்படமாட்டாது. முழுமையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக் கப்படும். விண்ணப்ப இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அச்சுப் பிரதியினை அனுப்ப வேண்டிய முகவரி "பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்ல" ஆகும்.

05 பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் அனைத்துப் பாடங்களின் போதும் மண்டப பிரதானி திருப்தியடையும் வகையில் தமது ஆள் அடையாளத்தினை நிரூபிக்க வேண்டும். அதற்காக கீழ்வரும் ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

I. தேசிய ஆளடையாள அட்டை;
II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு;
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அதேபோன்று பரீட்சார்த்திகள் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் உபகரணங்களை அணியவில்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையில் இரண்டு காதுகளும் மறைக்காத வகையில் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அவ்வாறே தமது ஆள் அடையாளத்தை நிரூபிப்பதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள், அத்துடன் பரீட்சை மண்டபத்தினுள் உட்பிரவேசித்த தருணம் முதல் பரீட்சை நிறைவடைந்து வெளியேறும் வரையில் பரீட்சை அதிகாரிகள் விண்ணப்பதாரர்களை

அடையாளம் காணும் வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

06. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணபித்திருப்பார்கள் எனும் முன் தீர்மானத்தின் அடிப்படையில் விண்ணப்ப இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப் படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அனுப்பியுள்ள விண்ணப்பதாரருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்படும்.

பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள் பரீட்சை மண்டப பிரதானியிடம் தமது கையொப்பம் உறுதிப்படுத்தடுத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தை முன்னிலைப்படுத்த வேண்டும். அத்தகைய அனுமதிப் பத்திரம் இன்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. விண்ணபதாரர்களுக்கு அனுமதிப் பத்திரம் அனுப்பிவைக்கப்பட்ட உடன் அது தொடர்பில் குறிப்பிட்டு அறிவித்தல் ஒன்று செய்திப் பத்திரிகைகள் மற்றும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் பிரசுரிக்கப்படும். அவ் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 02 அல்லது 03 நாட்கள் கழிந்த பின்னரும் அனுமதிப் பத்திரம் கிடைக்கவில்லை எனின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தில் அது தொடர்பில் விசாரிக்க வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரர் தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை சரியாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரர் கொழும்பிற்கு வெளியே வசிப்பவராயின், அவ் விபரங்களுடன் தொலை நகல் மூலமாக அனுமதிப் பத்திரத்தின் பிரதி ஒன்றை துரிதமாக பெற்றுக் கொள்ளக்கூடியதாக விண்ணப்பதாரரின் தொலைநகல் இலக்கம் ஒன்றையும் குறிப்பிட்டு கடிதம் ஒன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்புவதனூடாக் விசாரிப்பது பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் ஏதேனும் தகவல்களை நிரூபிப்பதற்காக பற்றுச் சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப் படிவத்தை தபால் செய்யும் போது வழங்கப்பட்ட பதிவுத் தபால் பற்றுச் சீட்டினை தயார் நிலையில் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். பரீட்சைக்கு சில நாட்களுக்கு முன்னர் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்திலிருந்து அனுமதிப் பத்திரங்களை பதிவிறக்கம் செய்யவும் சந்தர்ப்ப மளிக்கப்படும்.

07 பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்று வதற்கு அல்லது பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்தமையை ஏற்றுக் கொண்டதாக கருதப்படலாகாது.

08. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தைக் கொண்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்கு தோற்றக்கூடிய வகையில் திணைக்களத் தலைவர்கள் கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணச் செலவினங்கள் செலுத்தப்படமாட்டாது.

09. பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழி மூலங்களில் மாத்திரமே நடைபெறும். அவற்றும் தாம் கல்வி கற்ற மொழி மூலம் அல்லது அரச கரும மொழி ஒன்றில் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்பதுடன், தோற்றும் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் விடையளிக்க வேண்டும் விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னராக மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது. இப் பரீட்சையானது கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

10. விண்ணப்பப் படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்திலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்ப தாரர் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரூடாக உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன் பரீட்சைக்குத் தோற்றும் முதலாம் நாளில் பரீட்சை மண்டப பிரதானியிடம் தமது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

11. **பரீட்சை நடைமுறை**: ஒவ்வொரு வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கும் தோற்றக்கூடிய உத்தி யோகத்தர்களுக்கான பாடத்திட்டம் கீழே குறிப்பிடப் பட்டுள்ளது.

11.1 முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமல்லாத) வகுதி 02 - தரம் III உத்தியோகத்தர்களுக்கான I ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை

| *பாடம்* | *பாட இலக்கம்* | *புள்ளிகள்* | *காலம்* | *சித்தியடைவதற்கான ஆகக் குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 01. அலுவலக நடை முறைகள் | 01 | 100 | 2 மணி | 40 |

| *பாடம்* | *பாட இலக்கம்* | *புள்ளிகள்* | *காலம்* | *சித்தியடைவதற்கான ஆகக் குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 02. நிதிப் பிரமாணங்கள் தொடர்பான அடிப்படை அறிவு | 02 | 100 | 2 மணி | 40 |
| 03. கணினி அறிவு தொடர்பான பரீட்சை | 03 | 100 | 1 ½ மணி | 40 |

11.1.1 பாட இலக்கம் (01) அலுவலக நடைமுறைகள்

அரச அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அலுவலக நடைமுறைகள் தொடர்பான அடிப்படை அறிவு

i. அலுவலக நடைமுறைகள் தொடர்பான கோட்பாடுகள்
ii. அலுவலக நடைமுறைகள் தொடர்பான கோட்பாடுகளின் முக்கியத்துவம்
iii. அலுவலக நடைமுறைகளை பயன்படுத்துவது தொடர்பான புரிதல்
iv. ஆவணங்களை கோவைப்படுத்தல்.

11.1.2 பாட இலக்கம் (02) நிதிப் பிரமாணங்கள் தொடர்பான அடிப்படை அறிவு

அரச அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் நிதிப் பிரமாணங்கள் தொடர்பான அடிப்படை அறிவு

நிதிப் பிரமாணக் குறிப்பின் I, II ,III, IV, V ஆவது அத்தியாயங்களின் கீழ் ஒன்றிணைந்த நிதியம், வருடாந்த செலவு மதிப்பீட்டுக்கமைய செலவுகளுக்கான அதிகாரம் மற்றும் செலவுக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவு, நிதிக் கட்டுப்பாடு மற்றும் கணக்கு வைத்தல் மற்றும் செலுத்துகை தொடர்பில் பொதுவான புரிதல்.

11.1.3 பாட இலக்கம் (03) கணினி அறிவு தொடர்பான பரீட்சை

I. விண்ணப்பதாரர்களிடம் கீழ்வரும் திறமைகள் உள்ளனவா என்பதை பரிசோதிப்பது இப் பரீட்சையின் குறிக்கோளாகும்,

- தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அடிப்படைக் கோட்பாடுகள்
- கணினியின் அடிப்படைப் பாகங்கள் மற்றும் அவற்றின் கோட்பாடுகள்
- வன்பொருட்கள் மற்றும் மென் பொருட்கள்

II. இதன் கீழ் எதிர்பார்க்கப்படும் அறிவு மற்றும் திறன்கள்

- கணினி ஒன்றை முறையாக செயற் படுத்துதல் மற்றும் செயலிழக்கச் செய்தல்
- கணினித் தட்டு ஒன்றில் கணினிக் கோவைகளின் தொகுதி (Directory) மற்றும் கணிணிக் கோவைகள் (File) அமைந்துள்ள விதம்
- கணினிக் கோவைத் தொகுதி ஒன்றை புதிதாக உருவாக்குதல், அக் கோவைத் தொகுதியில் புதிய கோவை ஒன்றை ஆரம்பித்தல், கோவைக்கு இலக்கமிடல், பிரதி செய்தல், பிரதி செய்த கோவைகளை கோவைத் தொகுதியில் உள்ளடக்குதல், ஒரு கோவைத் தொகுதியை இன்னுமொரு கோவைத் தொகுதிக்கு கொண்டு செல்லல். பெயரை மாற்றுதல்
- மென்பொருட்களை மீளக் கட்டமைத்தல்.

III. வசனக் கட்டமைப்பு

- மென்பொருளை திறத்தல், புதிய கோவை ஒன்றை ஆரம்பித்தல், கோவையை களஞ்சியப்படுத்தல்
- மெனு வகைகள் மற்றும் அவற்றின் பயன்பாடு, உரையாடல் கூடுகள்
- ஆவணங்களின் சுழற்சி, ஆவணப் பகுதி களை தெரிவு செய்தல், பகுதிகளை உள்ளடக்குதல், நீக்குதல், கொண்டு செல்லல், பக்கங்களுக்கு இலக்கமிடல்.
- வசனங்களை கிடையாக ஒழுங்கமைத்தல், எழுத்து வகைகள், வரிசைகளில் இடை வெளி வைத்தல், வரிசைகளுக்கிடை யேயான இடைவெளி, வசனம் ஆரம் பிக்கும் இடங்களை நிர்ணயித்தல், எழுத்து வழுக்கள் மற்றும் இலக்கணம்
- பக்கங்களைக் கட்டமைத்தல், அச்சிடல் எல்லைகளை நிர்ணயித்தல், அச்சிடல்
- அட்டவணைகளை உள்ளடக்குதல், நிரல்களை உள்ளடக்குதல், கூடுகளைப் பிரித்தல், சேர்த்தல், கோவைகளை களஞ்சியப்படுத்தல், மீண்டும் அவற்றை தேடித் திறத்தல்.
- கோவையினை தபால் செயற்பாடு களுக்காக ஒன்று சேர்த்தல் (Mail Merging), தபால் ஆவணங்களை தயாரித்தல், கடித உறை தயாரிப்பு மற்றும் கடிதம் தயாரிப்பு
- Micros பயன்பாடு, Micros புதிதாக கட்டமைத்தல், குறிப்பிடல் மற்றும் செயற்படுத்துதல்.

IV. விரிதாள் (Spread Sheet)

- மென்பொருளை திறத்தல், புதிய வேலை ஏடு ஒன்றை திறத்தல் அவற்றில் பயணித்தல்.
- வேலைத்தாள் ஒன்றிற்கு தரவுகளை உள்ளீடு செய்தல், சமன்பாடுகளை உள்ளீடு செய்தல்
- இலக்கமிடல், வசனங்களை கிடையாக ஒழுங்குபடுத்தல், எழுத்து வடிவம் மற்றும் அளவினை மாற்றுதல்
- தரவுகளைப் பிரதியிடல், கொண்டு செல்லல், சமன்பாடுகளைப் பிரதி செய்தல்
- வரைபுகளை கட்டமைத்தல், வரைபு வகைகள், பதிப்பாக்கம், அச்சிடல்
- புதிய Micros களை உருவாக்குதல், இருக்கும் Micros களை திறத்தல் மற்றும் செயற்படுத்துதல்

V. முன்வைப்பு மற்றும் படங்களின் பாவணை (Presentation)

- மென்பொருளை திறத்தல் புதிய முன்வைப்பு ஒன்றை தயாரித்தல். Slides effect கட்டமைப்பு, முன்வைப்பு, களஞ்சியப்படுத்தல்
- Slides வசனங்களை உள்ளீடு செய்தல் மற்றும் மாற்றம் செய்தல் வசனங்களுக்கு விசேட பண்புகளை சேர்த்தல், எழுத்துக்களின் அளவு வடிவம் ஆகியவற்றை மாற்றுதல்
- Design களை முன்வைப்புக்களில் சேர்த்தல், Slides களுக்கு நிறக் கலப்பு செய்தல்

VI. தரவு அடிப்படைகள் (Data Base)

- புதிய தேடல் வினாக்கள் (Queries) மற்றும் இருக்கும் தேடல் வினாக்களை பயன்படுத்துதல், திறத்தல், பிரதி செய்தல், களஞ்சியப்படுத்தல், தேடல் வினாக்களுக்காக அட்டவணைகளைப் பயன்படுத்துதல்.
- தரவுகளை வகைப்படுத்தி தெரிவு செய்தல் (Sorting), அட்டவணையில் தரவுகளைத் தெரிவு செய்தல்
- அறிக்கைகளைத் (Reports) திட்டமிடல் மற்றும் கட்டமைத்தல், திறத்தல், பிரஹ்டி செய்தல், களஞ்சியப்படுத்தல், அச்சிடல்

VII. இணையம் (Internet)

- இணையம் என்றால் என்ன? அதன் பயன்பாடுகள் அதன் முகப்புப் பக்கம்
- இணையப் பக்கங்கள், இணையத்தில் பயணித்தல், இணையத் தளங்களைத் தேடுதல்
- தரவுகளை பதிவிறக்கம் செய்தல், இணையப் பக்கங்களை களஞ்சியப் படுத்தல், அவற்றை அச்சிடல்

குறிப்பு – 1 வது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி யடைவதற்காக மேற்படி பாட இலக்கம் 1,2,3 ஆகிய அனைத்துப் பாடங்களிலும் ஒரு பாடத்தில் ஆகக் குறைந்தது 40 புள்ளிகள் வீதம் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளை உத்தியோகத்தர் பெற வேண்டும்.

11.2 முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமல்லாத) வகுதி 02 - தரம் II உத்தியோகத்தர்களுக்கான 2 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை

| *பாடம்* | *பாட இலக்கம்* | *புள்ளிகள்* | *காலம்* | *சித்தி யடைவதற்கான ஆகக் குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 01. அலுவலக நடை முறைகள் | 04 | 100 | 1 ½ மணி | 40 |
| 02. விடயம் சார் அறிவு | 05 | 100 | 1 ½ மணி | 40 |
| 03. பொது அறிவு வினாப் பத்திரம் | 06 | 100 | 1 ½ மணி | 40 |

11.2.1 பாட இலக்கம் (04) அலுவலக நடைமுறைகள் – தாபன விதிக் கோவையின் 1 மற்றும் 2 ஆம் பகுதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விதிமுறைகள் தொடர்பான அறிவை பரிசோதிக்க எதிர்பார்க் கப்படுகின்றது.

தாபன விதிக் கோவையின் வகுதி I இன், II, IV, VII, VIII, XII அத்தியாயங்கள் தொடர்பான சாதாரண அறிவு

தாபன விதிக் கோவையின் வகுதி II இன் XL, VII ஆவது அத்தியாயங்கள் தொடர்பான சாதாரண அறிவு.

11.2.2 பாட இலக்கம் (05) விடயம் சார் அறிவு

பதவிகளுக்குரிய கடமைகள் தொடர்பில் விடயம் சார் அறிவு பரிசோதிக்கப்படும் (விண்ணப்பதாரர் உரித்தான பதவிக்குரியதாக பரிசோதிக்கப்படும்)

I. **ஆவண உதவியாளர்**

பாடசாலைக்கு சேவை ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக வெளி நிறுவனம் ஒன்றிற்கு கடிதம் ஒன்றை அனுப்புதல்/ அரச நிறுவனம் ஒன்றிற்கு கடிதமொன்றை அனுப்புதல், ஒழுங்குபடுத்தப்படாத வகையில் காணப்படும் தரவுகளை முறையாக ஒழுங்குபடுத்தி பயன் படுத்துவதற்கான நடைமுறைகள், விடுமுறைப் பதிவேடு ஒன்றை முறையாக பேணுதல், பாடசாலை தொலைபேசி பெயர்பதிவேடுகளைப் பேணுதல், பாடசாலைக்கு உரித்தான வளங்களை உள்ளடக்கிய ஆவணம் ஒன்றைத் தயாரித்தல், புள்ளி விபரங்களின் அறிக்கைகளை பேணுவது சார்ந்த விடயங்கள், சரியான ஊழியர் எண்ணிக்கை, ,மாணவர் எண்ணிக்கை மற்றும் ஏனைய தரவுகளைப் பேணுவது தொடர்பான அறிவு 5 S கோட்பாட்டினைப் பாடசாலையில் நடைமுறைப்படுத்துதல், பாடசாலை நிர்வாக கட்டமைப்பு தொடர்பாக/ பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் ஏனைய அமைப்புக்கள் தொடர்பான புரிதல், ஆவணங்களின் பாதுகாப்பு, பாடசாலையின் உத்தியோகபூர்வ வைபவங்களை ஒழுங்கு செய்தல், பாடசாலைப் பாடப் புத்தக விநியோகம், சீருடை விநியோகம் சார் செயற் பாடுகளை முறையாக மேற்கொள்ளல், பாட சாலையின் பல்வேறு செயற்பாடுகளுக்கு அவசியமான ஏடுகளை பேணுதல், பாடசாலைக் கணக்கினைப் பேணுதல்

II. **ஆய்வுகூட உதவியாளர்**

ஆய்வுகூடமொன்றில் உள்ள உபகரணங்களை அடையாளம் காண்பதில் உள்ள இயலுமையை அளவிடல், இதன் பொது உபகரணங்களின் பெயர், பயன்படுத்தப்படும் செயற்பாடுகள், அவ் உபகரணங்களின் பெறுமதி ஆகிய விடயங்கள் தொடர்பான அறிவு, ஒவ்வொரு விசேட உபகரணங்களையும் பயன்படுத்தும் விதம், களஞ்சியப்படுத்தும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விசேட விடயங்கள் தொடர்பான அறிவு, உ+ம்: நிறமாலை, நுணுக்குக்காட்டி போன்றன, பரிசோதனைகளின் பின்னர் மீள ஒழுங்குபடுத்துவது தொடர்பான அறிவு, எரி கருவிகளின் வகைகள், ஆய்வுகூடத்திற்கு வலுசக்தி வழங்குதல், எரிவாயுக் குழாய் முறைமை, நீர் வழங்கல் தொடர்பான அறி வினைப் பரிசோதித்தல், பரிசோதனைகளின் போது பயன்படுத்தப்படும் உபரணங்களில் வெப்பநிலை எல்லைகள் போன்றன தொடர் பான அறிவு.

- ஆய்வுகூடமொன்றில் உள்ள இரசாயன மூலப் பொருட்ளை இனங்காணும் திறன்

  மூலப் பொருட்களின் பௌதீக நிலைமையை இனங்காணும் திறன், திண்மம், திரவம் மற்றும் வாயுக்களாக காணப்படும் மூலப் பொருட்கள்- அவற்றின் தன்மை, நிறம், மணம் போன்றன, சாதாரண வளிமண்டல நிலைமையின் கீழ் களஞ்சியப்படுத்தக்கூடிய விதம் தொடர்பான அறிவு, கரைசல்களின் எதிர் விளைவுகளை இனங்காணல் உ+ம்: வலிமையான அமிலங்கள், காரங்களின் எதிர்விளைவுகள் போன்றன.

  தெரியாத இரசாயனப் பதார்த்தங்களை இனங்காணும் திறன், பாதிப்புக்களை ஏற் படுத்தக்கூடிய இரசாயனப் பதார்த்தங்களை இனங்காணும் திறன், அவற்றினால் ஏற் படக்கூடிய பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்காக அவற்றைக் களஞ்சியப்படுத்துவதற்கான விசேட ஒழுங்குமுறைகள் தொடர்பான அறிவு

- கரைசல்களைத் தயாரித்தல் தொடர்பான அறிவு

  ஆய்வுகூடப் பரிசோதனைச் செயற்பாடு களுக்காக பயன்படுத்தப்படும் தாவரங்கள் மற்றும் உயிரினங்களின் பாகங்களை நீண்ட காலம் பேணும் வகையில் களஞ்சியப்படுத்தும் விதம் தொடர்பான அறிவு

  பரிசோதனைகளின் போது மாணவர்களது பாதுகாப்பு தொடர்பில் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள், ஆய்வுகூடத்தில் பேணப்பட வேண்டிய ஆவணங்கள் தொடர்பான அறிவு

III. **பாடசாலைத் தரவுக் குறிப்பாளர்**

உள்ளீட்டுக் கருவிகள் (Input Device), வெளியீட்டுக் கருவிகள் (Output Device), தரவுகளைக் களஞ்சியப்படுத்தும் கருவிகள் (Storage Device) RAM மற்றும் ROM ஆகியவற்றிற்கிடையேயான வேறுபாடுகள், மற்றும் அவை தொடர்பான அறிவு, கணிணிகளில் (Operating System) பயன் படுத்தப்படும் தொழிற்பாட்டு முறைமை மற்றும் கணிணி வசனமாக்களுக்காக பயன் படுத்தக்கூடிய மென்பொருட்கள், சாதாரணை மேசைக் கணிணி ஒன்றில் (Desktop Computer) உள்ள பிரதானமான பாகங்கள்/ பகுதிகளை இனங்காணல், தட்டச்சுப் பலகையின் பாகங்களை இனங்காணல், கணிணிப் பயன்பாட்டின் போது பயனர்களது

உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதற்காக பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான அறிவு, மனித உழைப்பு மற்றும் சாதாரன தட்டச்சுப் பலகையைப் பயன்படுத்துவதை (Word Processing) விடவும் கணினியைப் பயன்படுத்துவதன் அனுகூலங்கள், கணிணித் தரவுகளை களஞ்சியப்படுத்துவதற்கான அலகுகள் தொடர்பான அறிவு, MS Word இல் கடிதம் ஒன்றைத் தயாரிக்கும் போது பயன்படுத்தப்படும் நடைமுறைகள் தொடர்பான புரிதல் (உ+ம்:- Bold, Underline, Font size.....), MS Excel (விரிதாள்கள்) இல் பயன்படுத்தப்படும் சமன்பாடுகள் (formula) தொடர்பான அறிவு (உ+ம்:- கூட்டுத்தொகை, சராசரி), தரவு வகைகளை (Data Types) இனங்காணல், MS Power Point ஐப் பயன்படுத்துதல் மற்றும் அதன் மூலமாக Presentation ஐ முன்வைக்கும் போது எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்த புரிதல், தட்டச்சு பலகையில் குறுங் குறியீடுகள் (Shortcut Keys) தொடர்பான புரிதல் மற்றும் குறுகிய குறியீடுகளுக்கான விளக்கங்களை இனங்காணல், Recycle Bin இல் உள்ள கோவை ஒன்றை மீண்டும் உரிய இடத்தில் களஞ்சியப்படுத்தல் (Restore) ஆகியவற்றிற்கான படிமுறைகள், இணையம், மின்னஞ்சல் பாவணை தொடர்பான புரிதல், திறந்த மற்றும் இலவச மென்பொருட்களைப் பயன்படுத்துவது தொடர்பான புரிதல், Generation Languages தொடர்பான அடிப்படைப் புரிதல், கணிணித் திரைத் (Monitor) தொழில்நுட்பத்திற்கமைய அடிப்படை அறிவு, கணிணி ஒன்றிற்கு தொடர்ச்சியாக வலுவழங்கும் இயந்திரத்தின் (UPS) பிரயோசனம் தொடர்பான அறிவு

IV. **மாணவர் விடுதிக் காப்பாளர் (பெண்/ ஆண்)**

V. **உதவி மாணவர் விடுதிக் காப்பாளர் (பெண்/ ஆண்)**

விடுதி ஒன்றில் தங்கியிருக்கும் மாணவர்கள் பின்பற்ற வேண்டிய சட்டவிதிமுறைகள் தொடர்பான அறிவு, மாணவர்கள் தொடர்பில் விடுதியில் பேணப்பட வேண்டிய ஆவணங்கள் தொடர்பான அறிவு, சமையல் அறைக்கான பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது பேணப்பட வேண்டிய இருப்பு ஆவணங்கள், பொருட்களை வழங்குதல் மற்றும் கையேற்றல் தொடர்பான அறிவு, விடுதியில் உள்ள சொத்துக்களின் பாதுகாப்புக்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான அறிவு, நீர் மற்றும் மின்சார வழங்கல் முறைமை தொடர்பான அறிவு, அவற்றைப் பராமரித்தல் தொடர்பான அறிவு, சிக்கனத் தன்மையைப் பேணுவதற்காக விடுதியில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான அறிவு, பரவும் நோய்கள் தொடர்பான அறிவு, பரவும் நோய்களை தடுப்பதற்கான விடுதி ஒன்றில் பின்பற்றப்பட வேண்டிய ஏற்பாடுகள் தொடர்பான அறிவு, திடீர் அனர்த்த நிலை ஒன்றின் போது செயற்பட வேண்டிய விதம் மற்றும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான அறிவு மற்றும் வருகை மற்றும் வெளியேறல் ஆவணத்தைப் பேணுவது தொடர்பான அறிவு

VI. **ஸ்டீரியோ வகை இயந்திர இயக்குனர்/ தொழில்நுட்ப உதவியாளர்**

ஸ்டீரியோ வகை இயந்திரங்களை இயக்குதல் மற்றும் அதன் மூலம் பிரேல் எழுத்து, அவற்றை சரிபார்த்தல் மற்றும் அவை சார்ந்த பணிகள், தேர்மோபோம் இயந்திரங்களை இயக்குதல், பிரேல் அச்சு இயந்திரங்களை செயற்படுத்துதல் தொடர்பான புரிதல், கணிணி மூலம் பிரேல் எழுதுதல், வாசித்தல், புத்தகம் கட்டுதம் தொடர்பில் சரியான நடைமுறைகள் தொடர்பான அறிவு

11.2.3 பாட இலக்கம் (06) பொது வினாப் பத்திரம்

1. ஏதேனும் ஒரு கூற்று அல்லது கலந்துரையாடல் ஒன்றில் குறிப்பினை வாசித்து புரிந்து கடிதம் அல்லது அறிக்கை ஒன்றை தயாரித்தல்.

2. சமகால சமூக நிகழ்வுகள் தொடர்பான புரிந்துணர்வின் அடிப்படையில் விளக்கமளிக்கும் தன்மை தொடர்பில் திறனை மதிப்பீடு செய்தல்

**குறிப்பு –** 2 வது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைவதற்காக மேற்படி பாட இலக்கம் 4,5,6 ஆகிய அனைத்துப் பாடங்களிலும் ஒவ்வொரு பாடங்களுக்கும் ஆகக் குறைந்தது 40 புள்ளிகள் வீதம் அல்லது அதற்கு மேல் பெற்றுக்கொள்ள வேண்டும்.

11.3 முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப மல்லாதா) வகுதி 02 தரம் I ஐச் சேர்ந்த உத்தி யோகத்தர்களுக்கான 3 வது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை

| *பாடம்* | *பாட இலக்கம்* | *புள்ளிகள்* | *காலம்* | *சித்தியடைவதற்கான ஆகக் குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 01 செயற்பாடுகள் தொடர்பான விசேட அறிவு | 07 | 100 | 1 ½ மணி | 40 |
| 02. விடயம் சார் ஆய்வு | 08 | 100 | 1 ½ மணி | 40 |

11.3.1 பாட இலக்கம் (07) செயற்பாடுகள் தொடர்பான விசேட அறிவு – எழுத்து மூலப் பரீட்சை

முதலாம் மற்றும் இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளின் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் உரிய உத்தியோகத்தர்களது அறிவு மற்றும் திறமை ஆகியன அவர்களது சேவை மூப்பிற்கு ஏற்ப மேம்படுத்தப்பட்டுள்ளதா என்பது தொடர்பிலும் காலப் போக்கில் குறித்த துறைகளில் ஏற்பட்டுள்ள நவீனமயமாக்கங்கள் தொடர்பில் அவர்களது அறிவு தொடர்பில் கணிப்பிடுவதற்கான பரீட்சை ஆகும், (விண்ணப்பதாரர் உரித்தாகும் பதவிக்குரியதாக பரிசோதிக்கப்படும்)

I. **ஆவண உதவியாளர்கள்**

பாடசாலைக்கு சேவை ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக வெளி நிறுவனம் ஒன்றிற்கு கடிதம் ஒன்றை அனுப்புதல்/ அரச நிறுவனம் ஒன்றிற்கு கடிதமொன்றை அனுப்புதல், ஒழுங்குபடுத்தப்படாத வகையில் காணப்படும் தரவுகளை முறையாக ஒழுங்குபடுத்தி பயன்படுத்துவதற்கான நடைமுறைகள், விடுமுறைப் பதிவேடு ஒன்றை முறையாக பேணுதல், பாடசாலை தொலைபேசி பெயர் பதிவேடுகளைப் பேணுதல், பாடசாலைக்கு உரித்தான வளங்களை உள்ளடக்கிய ஆவணம் ஒன்றைத் தயாரித்தல், புள்ளி விபரங்களின் அறிக்கைகளை பேணுவது சார்ந்த விடயங்கள், சரியான ஊழியர் எண்ணிக்கை, ,மாணவர் எண்ணிக்கை மற்றும் ஏனைய தரவுகளைப் பேணுவது தொடர்பான அறிவு 5 S கோட்பாட்டினைப் பாடசாலையில் நடைமுறைப்படுத்துதல், பாடசாலை நிர்வாக கட்டமைப்பு தொடர்பாக/ பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் ஏனைய அமைப்புக்கள் தொடர்பான புரிதல், ஆவணங்களின் பாதுகாப்பு, பாடசாலையின் உத்தியோகபூர்வ வைபவங்களை ஒழுங்கு செய்தல், பாடசாலைப் பாடப் புத்தக விநியோகம், சீருடை விநியோகம் சார் செயற்பாடுகளை முறையாக மேற்கொள்ளல், பாடசாலையின் பல்வேறு செயற்பாடுகளுக்கு அவசியமான ஏடுகளை பேணுதல், பாட சாலைக் கணக்கினைப் பேணுதல்.

II. **ஆய்வுகூட உதவியாளர்கள்**

ஆய்வுகூடமொன்றில் உள்ள உபகரணங்களை அடையாளம் காண்பதில் உள்ள இயலுமையை அளவிடல், இதன் பொது உபகரணங்களின் பெயர், பயன்படுத்தப்படும் செயற்பாடுகள், அவ் உபகரணங்களின் பெறுமதி ஆகிய விடயங்கள் தொடர்பான அறிவு, ஒவ்வொரு விசேட உபகரணங்களையும் பயன்படுத்தும் விதம், களஞ்சியப்படுத்தும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விசேட விடயங்கள் தொடர்பான அறிவு, உ+ம்: நிறமாலை, நுணுக்குக்காட்டி போன்றன, பரிசோதனைகளின் பின்னர் மீள ஒழுங்குபடுத்துவது தொடர்பான அறிவு, எரி கருவிகளின் வகைகள், ஆய்வுகூடத்திற்கு வலுசக்தி வழங்குதல், எரிவாயுக் குழாய் முறைமை, நீர் வழங்கல் தொடர்பான அறிவினைப் பரிசோதித்தல், பரிசோதனைகளின் போது பயன்படுத்தப்படும் உபரணங்களில் வெப்ப நிலை எல்லைகள் போன்றன தொடர்பான அறிவு

- ஆய்வுகூடம் ஒன்றில் உள்ள இரசாயனப் பதார்த்தங்களை அடையாளம் காணக் கூடிய திறமை

  மூலப் பொருட்களின் பௌதீக நிலையினை இனங்காண்பதற்கான திறமை

  திண்ம, திரவ வாயு மூலப் பொருட்கள், அவற்றின் தன்மை, நிறம், மணம், போன்றன, சாதாரண வளி மண்டல நிலையின் கீழ் களஞ்சியப்படுத்தக்கூடிய விதம் தொடர்பான அறிவு, பொருட்களின் எதிர்விளைவுகளை அடையாளம் காணல்; உ+ம்: வலுவான அமிலங்கள், காரங்களின் எதிர்விளைவுகள் போன்றன.

  தெரியாத இரசாயனப் பதார்த்தங்களை இனங்காண்பதற்கான இயலுமை,

பாதகமான இரசாயனப் பதார்த்தங்களை இனங்காணல், அத்தகைய பாதிப்புக் களை தவிர்ப்பதற்காக அவற்றைக் களஞ்சியப்படுத்துவதற்கான நடைமுறை கள் தொடர்பான அறிவு

- கரைசல்கள் தொடர்பான அறிவு

ஆய்வுகூடப் பரிசோதனைச் செயற்பாடு களுக்காக பயன்படுத்தப்படும் செடிகள் மற்றும் உயிரினங்களின் பாகங்களை நீண்டகாலம் களஞ்சியப்படுத்தும் விதம் தொடர்பான அறிவு

பரிசோதனையின் போது மாணவர்களது பாதுகாப்பு தொடர்பில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்

ஆய்வுகூடத்தினுள் பேணப்பட வேண்டிய ஆவணங்கள் தொடர்பான அறிவு

III. **பாடசாலை தரவுக் குறிப்பாளர்கள்**

உள்ளீட்டுக் கருவிகள் (Input Device), வெளியீட்டுக் கருவிகள் (Output Device), தரவுகளைக் களஞ்சியப்படுத்தும் கருவிகள் (Storage Device) RAM மற்றும் ROM ஆகியவற்றிற்கிடையேயான வேறுபாடுகள், மற்றும் அவை தொடர்பான அறிவு, கணிணிகளில் (Operating System) பயன்படுத்தப்படும் தொழிற்பாட்டு முறைமை மற்றும் கணிணி வசனமாக்களுக்காக பயன்படுத்தக்கூடிய மென்பொருட்கள், சாதாரணை மேசைக் கணிணி ஒன்றில் (Desktop Computer) உள்ள பிரதானமான பாகங்கள்/ பகுதிகளை இனங்காணல், தட்டச்சுப் பலகையின் பாகங்களை இனங்காணல், கணிணிப் பயன்பாட்டின் போது பயனர்களது உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதற்காக பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான அறிவு, மனித உழைப்பு மற்றும் சாதாரன தட்டச்சுப் பலகையைப் பயன்படுத்துவதை (Word Processing) விடவும் கணிணியைப் பயன் படுத்துவதன் அனுகூலங்கள், கணிணித் தரவுகளை களஞ்சியப்படுத்துவதற்கான அலகுகள் தொடர்பான அறிவு, MS Word இல் கடிதம் ஒன்றைத் தயாரிக்கும் போது பயன்படுத்தப்படும் நடைமுறைகள் தொடர்பான புரிதல் (உ+ம்:- Bold, Underline, Font size....), MS Excel (விரிதாள்கள்) இல் பயன்படுத்தப்படும் சமன்பாடுகள் (formula) தொடர்பான அறிவு (உ+ம்:- கூட்டுத்தொகை , சராசரி), தரவு வகைகளை (Data Types) இனங்காணல், MS Power Point ஐப் பயன்படுத்துதல் மற்றும் அதன் மூலமாக Presentation ஐ முன்வைக்கும் போது எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்த புரிதல், தட்டச் பலகையில் குறுங் குறியீடுகள் (Shortcut Keys) தொடர்பான புரிதல் மற்றும் குறுகிய குறியீடுகளுக்கான விளக்கங்களை இனங்காணல், Recycle Bin இல் உள்ள கோவை ஒன்றை மீண்டும் உரிய இடத்தில் களஞ்சியப்படுத்தல் (Restore) ஆகியவற்றிற்கான படிமுறைகள், இணையம், மின்னஞ்சல் பாவணை தொடர்பான புரிதல், திறந்த மற்றும் இலவச மென்பொருட்களைப் பயன்படுத்துவது தொடர்பான புரிதல், Generation Languages தொடர்பான அடிப்படைப் புரிதல், கணிணித் திரைத் (Monitor) தொழில்நுட்பத்திற்கமைய அடிப்படை அறிவு, கணிணி ஒன்றிற்கு தொடர்ச் சியாக வலுவழங்கும் இயந்திரத்தின் (UPS) பிரயோசனம் தொடர்பான அறிவு.

IV. மாணவர் விடுதிக் காப்பாளர் (பெண்/ ஆண்)

V. உதவி மாணவர் விடுதிக் காப்பாளர் (பெண்/ ஆண்)

விடுதி ஒன்றில் தங்கியிருக்கும் மாணவர்கள் பின்பற்ற வேண்டிய சட்டவிதிமுறைகள் தொடர்பான அறிவு, மாணவர்கள் தொடர்பில் விடுதியில் பேணப்பட வேண்டிய ஆவணங்கள் தொடர்பான அறிவு, சமையல் அறைக்கான பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது பேணப்பட வேண்டிய இருப்பு ஆவணங்கள், பொருட்களை வழங்குதல் மற்றும் கையேற்றல் தொடர்பான அறிவு, விடுதியில் உள்ள சொத்துக்களின் பாதுகாப்புக்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைள் தொடர்பான அறிவு, நீர் மற்றும் மின்சார வழங்கல் முறைமை தொடர்பான அறிவு, அவற்றைப் பராமரித்தல் தொடர்பான அறிவு, சிக்கனத் தன்மையைப் பேணுவதற்காக விடுதியில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான அறிவு, பரவும் நோய்கள் தொடர்பான அறிவு, பரவும் நோய்களை தடுப்பதற்கான விடுதி ஒன்றில் பின்பற்றப்பட வேண்டிய ஏற்பாடுகள் தொடர்பான அறிவு, திடீர் அனர்த்த நிலை ஒன்றின் போது செயற்பட வேண்டிய விதம் மற்றும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான அறிவு மற்றும் வருகை மற்றும் வெளியேறல் ஆவணத்தைப் பேணுவது தொடர்பான அறிவு

VI. ஸ்டீரியோ வகை இயந்திர இயக்குனர்/ தொழில்நுட்ப உதவியாளர்

ஸ்டீரியோ வகை இயந்திரங்களை இயக்குதல் மற்றும் அதன் மூலம் பிரேல் எழுத்து, அவற்றை சரிபார்த்தல் மற்றும் அவை சார்ந்த பணிகள், தேர்மோபோம் இயந்திரங்கள இயக்குதல், பிரேல் அச்சு இயந்திரங்களை செயற்படுத்துதல் தொடர்பான புரிதல், கணிணி மூலம் பிரேல் எழுதுதல், வாசித்தல், புத்தகம் கட்டுதம் தொடர்பில் சரியான நடைமுறைகள் தொடர்பான அறிவு

11.3.2. பாட இலக்கம் (08) விடயம் சார் ஆய்வு

அலுவலக நிர்வாகத்திற்குரிய பிரச்சனை ஒன்றிற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளைப் பரீட்சிக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட பல்தேர்வு வினாப் பத்திரமொன்றிற்கு பதிலளிக்க வேண்டும்.

குறிப்பு -3 வது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைவதற்கு மேற்படி பாட இலக்கம் 7,8 ஆகிய அனைத்து பாடங்களுக்கும் ஒவ்வொரு பாடங்களுக்கும் 40 புள்ளிகள் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளியை உத்தியோகத்தர் பெற்றுக் கொள்ள வேண்டும்.

12 பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது. அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதிகளைக் கொண்டிருப்பதாக அங்கீகரிப்பதாக கருதலாகாது.

13 இப் பரீட்சை அறிவித்தலில் உள்ளடங்காத ஏதேனும் ஒரு விடயம் இருப்பின் அவை தொடர்பில் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

14 சிங்களம். தமிழ், மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ் அறிவித்தலில் மொழி வசனங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப் பாடின்மைகள் அல்லது வேறுபாடுகள் காணப்படும் பட்சத்தில், அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலுக்கமய நடவடிக்கை எடுக்கப்படும்.

நாலக களுவெவ,
செயலாளர்,
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி
அமைச்சு.

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்ல,
2025, திசெம்பர் 01.

05-388

---

**சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு**

**மாணவ தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு – 2026**

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் மாணவ தாதியர் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து 2026.05.29 - 2026.06.30 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அமைச்சின் உத்தியோகபூர்வ இணையதளத்தின் (www.health.gov.lk) ஊடாக மாத்திரமே இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

1. **கவனிக்க வேண்டியவை:**

1.1. ஒரு விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பத்தை மட்டுமே சமர்ப்பிக்க முடியும். ஒன்றுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் அனைத்து விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புகளும் இன்றி நிராகரிக்கப்படும். 2021, 2022, 2023 மற்றும் 2024 ஆகிய எல்லா வருடங்களிலும் அல்லது சில வருடங்களில் க.பொ.த. (உ.தர) பரீட்சையில் சித்தியடைந்திருந்தாலும் ஒரு விண்ணப்பம் மட்டுமே சமர்க்க முடியும். அத்தகைய விண்ணப்பதாரர்கள் தமது விருப்பத்திற்கு அமைய தேர்ந்தெடுக்கப்பட்ட வருடத்திற்காக விண்ணப்பிக்க முடியும். எல்லா வருடங்களுக்காகவும் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கக்கூடாது. அவ்வாறின்றி எல்லா வருடங்களிலும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் அனைத்து விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புகளும் இன்றி நிராகரிக்கப்படும்.

1.2. கடந்த பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்பு தொடர்பாக அவதானம் செலுத்தும் போது, ஒரு மாணவர் அரசாங்கத்தின் இலவசக் கல்விச் சலுகையின் கீழ் பல்வேறு அரச நிறுவனங்களினால் நடாத்தப்படும் கற்கை நெறிகள் பலவற்றில் இணைவதால், தகுதியுடைய பல மாணவர்களுக்கு இதுபோன்ற ஒரு வாய்ப்புக்கூட கிடைக்காமல் இருப்பது அவதானிக்கப்பட்டது. இது தவிர இந்த நிலை காரணமாக அரசாங்கத்தின் பணம் வீண் விரையமாகி வருவதுடன், பாடநெறியின் இறுதியில் எதிர்பார்த்த எண்ணிக்கையில் பயிற்றுவிக்கப்பட்ட தொழில்வல்லுனர்களின் எண்ணிக்கை இல்லாத காரணத்தால் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் திட்டமிட்ட இலக்குகளை அடைய முடியாதுள்ளது. எனவே, மேற்படி நிலைமையைக் குறைப்பதற்கு ஒவ்வொரு விண்ணப்பதாரர்களுக்கும் ஒரு சந்தர்ப்பத்தையாவது வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகள் இந்த வர்த்தமானி அறிவித்தலின் பந்தி இலக்கம் 5 இல் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி, இலக்கம் 5.1 முதல் 5.5 வரையிலான துணைப் பந்திகளில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளவாறு தகுதியற்ற ஒருவர் இதற்காக விண்ணப்பித்தல் கூடாது. எவ்வாறாயினும், அத்தகைய தகுதியற்றவர்கள் இதற்கு விண்ணப்பித்து, பின்னர் கண்டறியப்பட்டால், வர்த்தமானி அறிவித்தலின் துணைப் பந்தி 9.3 இன்படி அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

1.3. கடந்த ஆட்சேர்ப்புகளில், உண்மைக்குப் புறம்பான தகவல்கள் (தவறான பரீட்சை ஆண்டுகள், பாடங்கள், பெறப்பட்ட மதிப்பெண்கள் போன்றவை) உள்ளிட்டு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன், சில விண்ணப்பதாரர்கள் பொய்யான தகவல்களை உள்ளிட்டு தயாரிக்கப்பட்ட சான்றிதழ்கள் நேர்முகப் பரீட்சைக்கு சமர்ப்பிக்கப்பட்டமையும் அவதானிக்க முடிந்தது. இது ஒரு பாரிய தவறாகும். எனவே, எந்தவொரு விண்ணப்பதாரரும் தாம் சமர்ப்பிக்கும் இணையவழி விண்ணப்பத்தில் தவறான தகவல்களை உள்ளிடக்கூடாது. தவறான தகவல்களை உள்ளிட்டு சமர்ப்பிக்கப்படும் அனைத்து விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புகளும் இன்றி நிராகரிக்கப்படும் என்பதுடன், அத்தகைய விண்ணப்பதாரர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்படும் என்பதுடன், அரசாங்க சேவைக்கு இணைய முடியாதவர்களின் கருப்புப் பட்டியலில் அவர்களின் பெயர்கள் சேர்க்கப்படும்.

1.4. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் முதலில் இந்த வர்த்தமானி அறிவித்தலில் மற்றும் இணையதளத்தில்; குறிப்பிடப்பட்டுள்ள இணையவழி விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்றாக படித்துப் புரிந்து கொண்டு, இந்த கற்கைநெறிக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கத் தகுதியானவரா என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். அதன் பின்னர் வர்த்தமானி அறிவித்தலின் 7.3 பந்தியின்படி, எந்தவொரு இலங்கை வங்கிக்கிளையில் 1,000.00 பணத்தை செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீற்று, 9.4, 9.5, மற்றும் 9.6 ஆகிய பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை தயார்செய்து விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதன் மூலம் விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான செயல்முறையை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும்.

02. **பாடநெறிக்கு தொடர்புடைய கல்வி மற்றும் இதர தகுதிகள் :**

| *க.பொ.த.(சா.தர) தகைமை* | *க.பொ.த. (உ.தர) தகைமை* | *பயிற்சிக்கான பிற தகைமைகள் மற்றும் விஷேட விடயங்கள்* |
|---|---|---|
| சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய 04 பாடங்களில் திறமை சித்தியுடன் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் க.பொ.த (சாதாரண) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல். | 2021, 2022, 2023 அல்லது 2024 ஆம் ஆண்டில் ஏதாவதொரு ஆண்டில் கல்விப் பொது தராதர (உ. தர) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான பிரிவிற்குரிய உயிரியல், இரசாயனவியல், விவசாயவியல், பௌதீகவியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல். (பொது அறிவுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த)<br><br>அல்லது<br><br>2021, 2022, 2023 2024 ஆம் ஆண்டில் ஏதாவதொரு ஆண்டில் கல்விப் பொது தராதர (உ. தர) பரீட்சையில் பௌதீக விஞ்ஞானப் பிரிவிற்குரிய இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதீகவியல் மற்றும் உயர் கணிதம் ஆகிய பாடங்களில் 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் (பொது அறிவுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த) | முழு நேர கற்கை நெறியான இதன் காலம் 03 வருடங்கள் ஆகும். அத்துடன் ஆங்கில மொழியில் நடத்தப்படும்.<br><br>2026.05.29 ஆம் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 28 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.<br><br>உயரம் 04 அடி 10 அங்குலத்திற்கு (147.3 cm) குறையாதிருத்தல்.<br><br>திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும்.<br><br>ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும் |

**அட்டவணை இலக்கம் 01**

03. **கற்கை நெறிக்கு தெரிவு செய்யும் முறை :**

3.1. மாணவ தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பதற்கான 2013.11.19 ஆம் திகதிய 1837/8 எனும் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கை தாதியர் சேவைக்கான சேவை பிரமாணக்குறிப்பு மற்றும் அதனுடன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைய தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து மாணவர் தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். (ஆண் விண்ணப்பதாரிகளின் ஆட்சேர்ப்பானது, தாதியர் சேவை பிரமாணக்குறிப்பின் விதிமுறைகளின் கீழ் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.)

3.2. நாடளாவிய ரீதியில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள மொத்த எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்திலும் சனத்தொகையின் அடிப்படையில், சனத்தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து ஆட்சேர்ப்பு செய்யவேண்டிய எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

3.3. அதன்பின்னர் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய எண்ணிக்கை உரிய மாவட்டத்திலும் இருந்து 2021, 2022, 202 அல்லது 2024 ஆம் ஆண்டின் அல்லது பரீட்சைகளில் ஒன்றில், அந்த ஒவ்வொரு பரீட்சையிலும் விண்ணப்பித்து தேவையான குறைந்தபட்ச கல்வித் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதார்களின் எண்ணிக்கையின் விகிதாசாரத்திற்கு பிரிக்கப்பட்டு உரிய மாவட்டத்திலும் இருந்து அந்த ஒவ்வொரு பரீட்சையிலும் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய தொகை தீர்மானிக்கப்படும்.

3.4. அதன்பின்னர் அந்த ஒவ்வொரு பரீட்சைகளில் இருந்தும் ஆட்சேர்ப்பு செய்யவேண்டிய எண்ணிக்கை அந்த பரீட்சையில் உயிரியல் மற்றும் பௌதீக விஞ்ஞானம் பாடத்துறையின் கீழ் இந்த கற்கைநெறிக்கு விண்ணப்பித்த குறைந்த கல்வித்தகைமைகளை பூர்த்தி செய்துள்ள மொத்த விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையின் விகிதாசாரத்திற்கு

பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து ஒவ்வொரு பரீட்சையிலும் ஒவ்வொரு பாடத்துறையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய தொகை தீர்மானிக்கப்படும்.

3.5. அவ்வாறு ஒவ்வொரு பரீட்சைகளில் இருந்தும் ஒவ்வொரு பாடத்துறையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய தொகை தீர்மானிக்கப்பட்டு அந்த எண்ணிக்கையில் 5% ஆண் விண்ணபதாரிகளையும், 95% பெண் விண்ணபதாரிகளையும் உள்ளடக்கியதாக ஒவ்வொரு பரீட்சைகளில் இருந்தும் ஒவ்வொரு பாடத்துறையின் கீழ் மாவட்டத்தின் அதிகூடிய Z மதிப்பெண்களைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் கற்கை நெறிக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

04. **தகுதிகள் :**

அனைத்து விண்ணப்பதாரர்களும் -

4.1. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

4.2. விண்ணபதாரர்கள் நன்நடத்தை உடையவரா கவும், சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

4.3. தாம் விண்ணப்பிக்கும் மாவட்டம் வதிவிட மாவட்டமாகக் கருதப்படுவதற்கு, விண்ணப்பதாரர் விண்ணப்ப முடிவுத் திகதியான 2026.06.30 ஆம் திகதிக்கு கிட்டிய 03 வருடங்கள் தொடர்ந்து அந்த மாவட்டத்தில் வசித்திருக்க வேண்டும். அதனை உறுதிப்படுத்துவதற்காக கிராம அலுவலர் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், தொடர்ந்து 03 வருடங்களாக வதிவிட காலத்தை நிரூபிக்க முடியாத விண்ணப்பதாரர்களுக்கு அவர்களின் வதிவிட மாவட்டமாக அவர்கள் விண்ணப்பித்த மாவட்டத்தை வழங்க முடியாது என்பதுடன், அத்தகைய விண்ணப்பதார்களின் முந்தைய வதிவிட காலங்களை கருத்தில் கொண்டு, விண்ணப்பதாரர் அடுத்ததாக நீண்ட காலங்கள் வசித்த மாவட்டம் விண்ணப்பதாரருக்கான வதிவிட மாவட்டமாக நேர்முகப் பரீட்சை சபையினால் தீர்மானிக்கப்படும். இதற்குத் தேவையான ஆவணங்களை நேர்முக சபையிடம் விண்ணப்பதாரர்கள் உடனடியாக சமர்ப்பித்தல் வேண்டும்.

**குறிப்பு** :-

விண்ணப்பதாரர் ஒருவரின் தகப்பன் அல்லது தாய் அரச, மாகாண அரச சேவையில் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றில் இடமாற்றம் பெறக்கூடிய சேவையிலுள்ள காரணத்தால் அல்லது வேறு தவிர்க்க முடியாத காரணங்களினால் கிட்டிய 03 வருட வதிவை அவரினால் உறுதி செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டால் அது தொடர்பான இறுதித்தீர்மானம் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும்.

05. **கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பதற்கு அல்லது இணைவதற்கு தகுதியற்றவர்கள்** : -

5.1 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் நடாத்தப்படும் அரசாங்க பல்கலைக்கழகம்/ அரசாங்க பல்கலைக்கழக கல்லூரியொன்றில் க.பொ.த (உ.தர) தகைமைகளுடன் ஆட்சேர்ப்பு செய்யப்படும் பட்டப் படிப்பைத் தொடர்வதற்காக "அரசாங்க இலவசக் கல்விச் சலுகைகள்" இன் கீழ், உள்ளக மாணவராகப் பதிவு செய்தவர்கள்/ கற்றுக்கொண்டிருப்பவர்கள்.

5.2 தேசிய கல்வியல் கல்லூரியொன்றில் க.பொ.த. (உ.தர) தகைமைகளுடன் ஆட்சேர்ப்பு செய்யப் படும் கற்கைக்காக பதிவு செய்தவர்கள்/ கற்றுக் கொண்டிருப்பவர்கள்.

5.3 சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் கீழ் அல்லது வேறு ஏதாவது அரச நிறுவனம் அல்லது க.பொ.த (உ.தர) தகைமைகளுடன் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட முழுநேர கற்கைக்காக பதிவு செய்தவர்கள்/ கற்கையை தொடர்பவர்கள்;.

5.4 மேலே 5.1, 5.2 மற்றும் 5.3 இன் கீழ் குறிப் பிடப்பட்டுள்ள நிறுவனமொன்றில் கற்கைக்காக பதிவு செய்துள்ள மாணவர்கள் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியான பிறகு, அவர்கள் தங்கள் பதிவை இரத்து செய்தாலும், அவர்கள் இதற்காக விண்ணப்பிக்க/இணைவதற்கு தகுதி பெற மாட்டார்கள். மேலும் வர்த்தமானி அறிவித்தல் வெளியான பிறகும்/ நேர்முகப்பரீட்சை நடாத்திய பிறகும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங் களுக்குரிய கற்கைகளுக்கு பதிவு செய்து பின்னர் அந்த பதிவை இரத்து செய்தாலும், அவர்களும் கற்கை நெறியில் இணைவதற்கு தகுதி பெற மாட்டார்கள்.

5.5 திருமணம் பதிவு செய்யப்பட்ட அல்லது விவாகரத்து செய்த நபர்கள்.

06. **ஏனைய விடயங்கள் :**

6.1 நீங்கள் யாதேனுமோர் பல்கலைக்கழத்தில் பட்டப் படிப்பை பூர்த்தி செய்தவராக இருந்தால், அந்தப் பட்டம் செயற்பாட்டுத் திகதியானது (Effective Date) இந்த கற்கைநெறிக்கான விண்ணப்பத் திகதிக்கு அதாவது 2023.05.29 இற்கு முந்திய திகதியாக இருக்க வேண்டும்.

6.2 மேற்படி சகல நிபந்தனைகளையும் பூர்த்தி செய்திருப்பினும் கட்டாயமாக நீங்கள் விண்ணப்பிக்கும் இந்த கற்கை நெறிக்கு இணைப்பதாக இந்த வர்த்தமானி அறிவித்தலில் எந்த இடத்திலும் அல்லது பந்தியிலும் குறிப்பிப்படவில்லை என்பதை கவனத்திற் கொள்ளல் வேண்டும். குறிப்பிடப்பட்டுள்ள சகல நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருப்பினும் நீங்கள் போதியளவு Z பெறுமானத்தை பெறாத விடத்து அல்லது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகளை பூர்த்தி செய்திரா விடின், எவ்விதத்திலும் இப்பயிற்சிக்கு தகுதியற்றவராக கருதப்படுவீர்கள்.

6.3 மேலே 5.1, 5.2 மற்றும் 5.3 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனமொன்றில் முழு நேர கற்கைக்காக பதிவு செய்துள்ள மாணவர்கள்;/ கற்றுக்கொண்டிருப்பவர்கள் அல்லது 5.4 மற்றும் 5.5 பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியற்றவர்கள் இதற்காக விண்ணப்பித்து, பின்னர் கண்டறியப்பட்டால் உரிய கற்கையிலிருந்து/ பதவியிலிருந்து நீக்கப்படுவதுடன் அதுவரை அரசாங்கத்தினால் அவருக்காக செலவிடப்பட்ட சகல கொடுப்பனவுகளும் அவரிடமிருந்து அறவிடப்படுவதுடன் மீண்டும் அரசாங்க சேவையில் இணைய முடியாதவாறு கருப்பு பட்டியலில் அவருடைய பெயர் உள்வாங்கப்படும்.

6.4 கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய சகல அனைத்து தகைமைகளும் விண்ணப்ப இறுதித் தினமான 2026.06.30 ஆம் திகதிக்கு சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

6.5 மேலும், இந்த கற்கை நெறிக்கு வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் இன்றி விண்ணப்பித்தால், அதனால் விண்ணப்ப தாரர்களுக்கு பின்னர் ஏற்படக்கூடிய அசௌகரியங் களுக்கு இந்த அமைச்சு எந்த பொறுப்பையும் ஏற்காது.

07. **விண்ணப்பிக்கும் முறை :**

7.1 மேற்படி பயிற்சி நெறிக்கு சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் (www.health.gov.lk) ஊடாக மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். அதற்காக இந்த அமைச்சின் இணையத்தளத்தில் உரிய பகுதியில் உள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.

7.2 **விண்ணப்பம் ஆங்கிலத்தில் மட்டுமே பூர்த்தி செய்யப்பட வேண்டும்.**

7.3 விண்ணப்பதாரிகள் ரூபா 1000.00 பணத்தை இலங்கை வங்கி, தப்ரோபேன் கிளையின் **இலக்கம் 7041318 எனும் சுகாதார** மற்றும் **வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளரின் பரீட்சைக் கட்டணம் அறவிடல் கணக்கிற்கு செலுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முன்** ஏதேனும் இலங்கை வங்கிக் கிளையில் இந்த தொகையை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் **இப்பணத்தை பணம் வைப்புச் செய்யும் இயந்திரம் ஊடாக அல்லது இணைய வங்கி சேவை மூலம் செலுத்தக்கூடாது.** இக்கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீண்டும் திருப்பித்தர மாட்டாது என்பதுடன் பிரிதொரு பரீட்சையொன்றுக்காக மாற்றம் செய்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. நீங்கள் மேற்படி கட்டணம் செலுத்தியதற்கான ஆதாரத்தை (பற்றுச்சீட்டு) பாதுகாப்பாக தம்வசம் வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் அதன் போது **அதனை கட்டாயமாக** சமர்ப்பித்தல் வேண்டும். அதன்படி, விண்ணப்பத்தை சமர்ப்பித்த பிறகு பணம் செலுத்தப்பட்டமை கண்டறியப்பட்டால் அந்த விண்ணப்பதாரர்களும் பற்றுச்சீட்டை சமர்ப்பிக்கத் தவறிய விண்ணப்பதாரர்களும் ஆட்சேர்ப்புக்குத் தகுதியற்றவர்களாக கருதப்படுவார்கள்.

7.4. **சமர்ப்பிக்கப்பட்ட இணையவழி விண்ணப்பத்தின் நகலை உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு பெற்றுக்கொள்ள வேண்டும்**

(அ) இந்த வர்த்தமானி அறிவிப்பிலும் அதனுடன் இணையவழி விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்காக இணையத்தளத்தில் வெளியிடப் பட்டுள்ள வழிகாட்டல் குறிப்பிலும் குறிப்பிடப் பட்டுள்ள அனைத்து விடயங்களின்படியும் வெற்றிகரமாக விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும், அவர்களின் விண்ணப்பம் முறையாக அனுப்பப்பட்ட உடனே அதன் நகல் உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும்.

(ஆ) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் கணினித் திரையில் தோன்றும் தமது விண்ணப்பத்தின் அச்சு நகலை (Print-out) பெற்றுக்கொள்ள வேண்டும். அதனை தபால் மூலம் அனுப்ப தேவையில்லை. விண்ணப்பம் சமர்ப்பித்த ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் தாம் இதற்காக விண்ணப்பித்திருப்பதை உறுதிப் படுத்தும் ஒரே மற்றும் முறையான சான்று இந்த நகலாக இருப்பதால் அதனை பாதுகாப்பாக வைத்திருப்பது உங்கள் பொறுப்பாகும்.

(இ) ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் விண்ணப்பத்தை சமர்ப்பித்த பின்னரும் உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்ப நகல் கிடைக்கவில்லை என்றால், விண்ணப்பம் சரியாக அனுப்பப் படவில்லை என பொருள் கொள்ள வேண்டும்.

மின்னஞ்சலுக்கு விண்ணப்பம் கிடைக்காத விண்ணப்பதாரர்களாயின் விண்ணப்பங்கள் முறையாக அனுப்பப்படவில்லை/ சமர்ப்பிக்கப்படவில்லை என்று கருதப்படும். அத்தகைய அனைவரும் விண்ணப்பம் சமர்ப்பிக்காத மாணவர்களாகக் கருதப்படுவர். எனவே அத்தகைய விண்ணப்பதாரர் உடனடியாக கீழே 7.5 (அ) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கம் அல்லது /மற்றும் மின்னஞ்சல் மூலம் மனித வள முகாமைத்துவ மற்றும் ஒருங்கிணைப்பு அலகுடன் தொடர்பு கொண்டு தமது விண்ணப்பம் தொடர்பான பிரச்சினையை 2026.06.30 ஆந் திகதிக்கு முன் தீர்த்துக்கொண்டு தமக்கான விண்ணப்ப நகலை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த நடவடிக்கை முழுமையாக விண்ணப்பதாரியின் பொறுப்பாகும் என்பதனையும் வலியுறுத்துகிறேன். எனினும் முறையாக இந்த அமைச்சகத்துக்கு கோரிக்கைகள் எதுவும் எந்த வகையிலும் பரிசீலிக்கப்படமாட்டாது.

(ஈ) மேலும், விண்ணப்பதாரர் ஒருவரினால் இந்த ஆட்சேர்ப்பு தொடர்பான எந்தவொரு விடயம் தொடர்பாகவும் செய்யப்படும் கோரிக்கைகள் தமது விண்ணப்பத்தின் பிரதியுடன் அனுப்பப்படல் வேண்டும் என்பதுடன், அதற்கு மாறாக சமர்ப்பிக்கும் எந்தவொரு கோரிக்கையும் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது என்பதை மேலும் அவதானத்திற்கு உட்படுத்துகிறேன்.

7.5. **அத்தியவசிய தகவல்கள் தொடர்பாக விசாரித்தல்**

(அ) இக்கற்கைக்கு விண்ணப்பிப்பதற்கான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதில் ஏதேனும் சிக்கல்கள் எழுந்தால் அது தொடர்பாக தொழில்நுட்ப உதவிகளுக்கு அல்லது மேலே பந்தி 7.4 (இ) இல் குறிப்பிடப்பட்ட சிக்கல்களைத் தீர்ப்பதற்காக மட்டும் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் 4.00 வரை சுகாதார அமைச்சின் மனித வள முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவின் 0112 340 007 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். hrcodmoh@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம். (மின்னஞ்சல் ஊடாக தொடர்பு கொள்ளும்போது எப்போதும் உங்கள் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் தொலைபேசி இலக்கத்தை குறிப்பிடுவது கட்டாயமாகும்.)

(ஆ) சம்பந்தப்பட்ட அனைத்து விபரங்களும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் மற்றும் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் இணையத்தளத்தில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், ஏனைய விடயங்கள் தொடர்பாக விசாரிப்பதை தவிர்க்கவும்.

08. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:**

8.1. இலங்கை நிருவாக சேவையில் உள்ள உத்தியோகத்தர் ஒருவர் / இலங்கை கல்விச் சேவையிலுள்ள உத்தியோகத்தர் ஒருவர் / இலங்கை கணக்காளர் சேவையில் உள்ள உத்தியோகத்தர் ஒருவர் /அரச பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர் / சமாதான நீதவான் ஒருவர்/ சட்டத்தரணி ஒருவர் அல்லது வருடாந்த சம்பளம் 512148.00 ரூபாவிற்கு குறையாத சம்பளம் பெறும் நிரந்தர ஓய்வூதியம் பெறும் அரச உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

8.2. இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு இணங்காத மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தல்களும் இன்றி நிராகரிக்காப்படும்.

09. **நேர்முகப்பரீட்சைக்கு நீங்கள் அழைக்கப்பட்டால் சமர்ப்பிக்க வேண்டிய விபரங்கள் :**

9.1. (அ) நீங்கள் வெற்றிகரமாக பதிவேற்றிய இணைத்தள விண்ணப்பங்களுக்கு அமைய குறைந்த கல்வித் தகைமையை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களில் இருந்து தயாரிக்கப்பட்ட முதன்மை பட்டியலொன்றை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாத்திரம் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையினால் இந்த பதவிக்குரித்தான ஆட்சேர்ப்புத் திட்டத்தில் மற்றும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் உடற்தகைமைகள் என்பன பரிசீலிக்கப்படும். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரர்கள்; பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) தவிர்க்க முடியாத காரணத்தினால் (நேர்முக சபையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய) விண்ணப்பதாரர் ஒருவருக்கு ஏதாவது சான்றிதழ்கள்/ ஆவணங்களை அன்றைய தினத்தில் சமர்ப்பிக்க முடியாதவிடத்து நேர்முகப்பரீட்சை சபையின் அறிவுறுத்தல்களுக்கு அமைய அந்த சான்றிதழ்கள்/ ஆவணங்களை நேர்முகப்பரீட்சை நடைபெற்ற தினத்திலிருந்து 07 நாட்களுக்குள் இந்த அமைச்சின்

பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) II இற்கு நேரில் கொண்டு வந்து கையளிக்க வேண்டும் என்பதுடன், அவ்வாறு செய்வதற்கு தவறும் அனைத்து விண்ணப்பதாரர்களும் இந்த தேர்வுக்குத் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவார்கள்.

9.2. இணையத்தளத்தின் ஊடாக பதிவேற்றம் (UPLOAD) செய்யப்பட்ட விண்ணப்பத்தின் அச்சுப்பிரதி (8.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுறுதி செய்யப்பட்ட)

9.3. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.

9.4. க.பொ.த (உ.தர) பரீட்சைப் பெறுபேறு மற்றும் Z பெறுமானத்தைக் குறிக்கும் சான்றிதழ் (பரீட்சை திணைக்களத்தினால் வழங்கப்பட்ட)

9.5. க.பொ.த (ச.தர) பரீட்சை பெறுபேற்றுச் சான்றிதழ் (பரீட்சை திணைக்களத்தினால் வழங்கப்பட்ட)

9.6. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் உள்நாட்டு சாரதி அனுமதிப்பத்திரம்.

9.7. ரூபா 1000.00 பணத்தை வங்கிக்கு செலுத்தி யமைக்கான ரசீது.

9.8. வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கான கிராம சேவை அலுவலரினால் வழங்கப்படும் வதிவு தொடர்பான சான்றிதழ்

9.9. மாணவர் பணி காட்டி (பாடசாலை விடுகைப் பத்திரம் - கல்வி B 59 பொது படிவம்)

9.10. மேலே 5.5 துணைப் பந்தியில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு திருமணம் பதிவு செய்யப்பட்டவர் அல்லது விவாகரத்து பெற்றவர் அல்ல என்பதை உறுதிப் படுத்துவதற்கான சமாதான நீதவான் முன் னிலையில் 50.00 ரூபா முத்திரையில் கையொப்ப மிடப்பட்ட உறுதிமொழி.

9.11. மேலே 5 வது பந்தியின் 5.1 முதல் 5.4 வரையான துணைப் பந்திகளில் விபரிக்கப்பட்டுள்ளபடி தகுதியற்றவர் இல்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கான உறுதிமொழி.

குறிப்பு :

(அ) மேலே 9.2 தொடக்கம் 9.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் தம்மால் சான்றுறுதி செய்யப்பட்ட நிழற்பிரதிகள் நேர்முகப்பரீட்சைக்கு வரும் போது கொண்டு வர வேண்டும்.

(ஆ) பயிற்சிக் கல்லூரிகளில் காணப்படும் இடவசதிகள் மற்றும் சேவை அவசியத்திற்கு ஏற்ப பயிற்சிக்கு இணைக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை என்பன சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

(இ) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் அனைவரும் பயிற்சிக்கு இணைக்கப்படுவதாக இந்த வர்த்தமானி அறிவித்தலில் எந்த இடத்திலும் அல்லது பந்தியிலும் குறிப்பிப்படவில்லை என்பதை கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

(ஈ) நேர்முகப்பரீட்சையின்பின்னர்தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் தொடர்பான விபரங்கள் http://www.health.gov.lk எனும் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படுவதுடன், எவருக்கும் தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்பட மாட்டாது. எவ்வாறாயினும், அவ்வப்போது எழும் குறிப்பிட்ட தகவல்களைப் பற்றி தெரிவிக்க நேரிட்டால், நீங்கள் சமர்ப்பித்த விண்ணபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கம் மற்றும் /அல்லது மின்னஞ்சல் முகவரியின் ஊடாக அறிவிக்கப்படும். எனவே, விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரியை மாற்றாமல், செயலில் வைத்திருப்பது உங்களின் பொறுப்பாகும். மேலும் மாற்றங்கள் அல்லது செயலற்று இருப்பதால் உரிய தகவல்கள் சரியான நேரத்தில் தெரிவிக்க முடியாமையினால் ஏற்படக்கூடிய பிரச்சனைகளுக்கு இந்த அமைச்சு பொறுப்பல்ல.

(உ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப் பதாரர்களுள் உரிய காலத்தில் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்காதவர்கள் அல்லது நேர்முகப் பரீட்சைக்கு உரிய தினத்தில் சமூகமளித்து உரிய தினத்தில் பதிவு செய்யாத விண்ணப்பதாரிகளினால் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பிறகு கற்கை நெறியில் இணைவதற்காக சமர்ப்பிக்கப்படும் மேன்முறை யீடுகள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

10. **பயிற்சித் திட்டம் :**

10.1. நேர்முகப் பரீட்சையின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் இந்த கற்கை நெறியை தொடர்வதற்கு பயிற்சி கல்லூரிக்கு உள்வாங்கப்படுவார்கள். கற்கை நெறிக்கான காலம் மற்றும் கற்க வேண்டிய மொழி என்பன இலக்கம் 2 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

10.2. பயிற்சிக்காக இணைக்கப்படும் பயிலுனர்கள் பயிற்சிக் கல்லூரியில் வலுவில் உள்ள விதிமுறைகளுக்கும் மற்றும் சுகாதார அமைச்சினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் ஏனைய விதிமுறைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

10.3. பயிற்சிக்காலத்தில் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்திபெறத் தவறும் அல்லது அவர்களின் வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமாக இல்லாவிட்டால் அல்லது பரீட்சை மற்றும் லீவு நிபந்தனைகளை மீறும் அல்லது பயிற்சிக்கு இணைத்துக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட கல்வி மற்றும் ஏனைய தகைமைகளில் ஏதாவது உண்மைக்கு புறம்பானவை அல்லது பிழையானவையென தெரியவருமிடத்து பயிற்சியின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவ்வித நட்டஈடுகளும் இன்றி பயிற்சியிலிருந்து நீக்கப்படுவார்கள்.

10.4. பயிற்சிக் காலத்தில் மாணவர்களுக்கு அரச நிருவாக சுற்றறிக்கை 10/2025 இன் உப ஆவணம் VI இன் நியதிகளுக்கு அமைய மாதாந்த கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

10.5. பயிற்சிக் கல்லூரிக்கு பயிற்சிக்காக உள்வாங்கப்படும் போது பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்வதாகவும், அப்பயிற்சியை இடைநடுவில் கைவிடுவதில்லை எனவும், அந்த பயிற்சியை முழுமையாக நிறைவு செய்த பின்னர் உரிய பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டால் குறைந்தபட்சம் பத்து வருடங்கள் (10) மத்திய / மாகாண அரச சேவையின் கீழ் உரிய பதவியில் சேவையாற்றுவதாகவும், சுகாதார செயலாளரினால் பரிந்துரைக்கப்படும் அதிகாரியுடன் ஒரு ஒப்பந்தத்திற்கு வர வேண்டும் என்பதுடன், உங்கள் பயிற்சி மற்றும் கட்டாய சேவைக் காலம் தொடர்பாக சுகாதார அமைச்சினால் சமர்ப்பிக்கப்படும் பிணைக்கு இரண்டு பிணையாளிகளுடன் உடன்பட வேண்டும். மேலே 10.3 இன் படி, பயிற்சியின் போது பயிற்சியிலிருந்து விலகினால், பயிற்சியை இடைநடுவில் கைவிட்டால், பயிற்சியிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது நியமனம் பெற்று பத்து (10) வருட காலம் மேற்படி உரிய பதவியில் சேவையாற்றுவதற்கு தவறினால் அவ்வாறான மாணவர்கள் பயிற்சியிலிருந்து/பதவியிலிருந்து நீக்கப்பட்டு இந்த காலத்தினுள் அவருக்கு அரசாங்கத்தினால்வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிடப்பட்ட செலவுகள்; மற்றும் பிணைத் தொகை என்பவற்றை அவர் சுகாதார அமைச்சிற்கு செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யத்தவறினால் அப்பணத்தை அறவிடுவதற்கு ஒப்பந்தத்தின் பிரகாரம் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

10.6. இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பதிகதியில் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், பயிற்சிக் காலத்திலும் திருமணம் புரியாமல் இருத்தல் கட்டாயமானதாகும்.

**11. சேவையில் ஈடுபடும் நியதிகள் :**

11.1. பயிற்சியின் பின்னர் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அரசாங்கம் கடமைப்பட்டிருக்காது. எனினும், பயிற்சியை நிறைவு செய்யும் தினமாகும் போது நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு அமைய தயாரிக்கப்படும்முன்னுரிமைவெற்றிடபட்டியலுக்கு அமைய சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கிய பின்னர் எஞ்சிய வெற்றிடங்களுக்கு பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்து இறுதிப்பரீட்சையில் சித்தியடையும் பயிலுனர்களின் பயிற்சி நெறியின் இறுதிப்பரீட்சை திறமையை கருத்திற்கொண்டு உரிய பதவியின் III ஆம் தரத்தின் பதவிக்கு நியமிப்பது தொடர்பாக பரிசீலிக்கப்படும். அத்துடன் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு அமைய இலங்கையில் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்படல் வேண்டும்.

11.2. நியமனம் பெற்றவர்களுக்கு அரச நிர்வாக சுற்றறிக்கை 10/2025 IV இன் விதிமுறைகளுக்கு அமைய சம்பளம் வழங்கப்படும்.

11.3. விண்ணப்பத்தை நிரப்பும் போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை மிகவும் கவனமாகவும் பிழையின்றியும் உள்ளிட வேண்டும்;. பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளும் போது அல்லது நியமனம் பெற்ற பின்னர் மேற்படி சான்றிதழ்கள் பொய்யானவை என கண்டறியப்பட்டால், சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கும், வழங்கப்பட்ட நியமனம் இரத்து செய்யப்பட்டு பயிற்சியிலிருந்து/ பதவியிலிருந்து நீக்கப்படுவதோடு அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதுடன், மீண்டும் அரச சேவையில் இணைய முடியாதவாறு கருப்பு பட்டியலில் அவருடைய பெயர் உள்வாங்கப்படும். மேலும், பயிற்சிக் காலத்தில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிட்ட செலவினங்கள் மற்றும் ஒப்பந்த பணம் அவரிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

11.4. பயிற்சிக்கு இணைக்கப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சியை தொடர்வதற்கு மற்றும் நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு போதியளவு உடல் மற்றும் உள ஆரோக்கியம் கொண்டவராக இருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு

பயிற்சியின் முதல் மாதத்திற்குள் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன், மருத்துவ பரிசோதனையில் தகுதியற்றவர் என காணப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சியை தொடர தகுதியற்றவராக கருதப்படுவார்கள்.

11.5. மேற்படி இணைக்கப்படும் சகல உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் சட்ட திட்டங்களுக்கும், அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அரச சேவைகள் தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் கட்டளைகளுக்கும், சேவைப் பிரமாணக்குறிப்பின் விதிமுறைகளுக்கும், அரச நிதி ஒழுங்கு விதிகளுக்கும், அரச சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கும் மற்றும் அவை தொடர்பாக காலத்திற்குக்காலம் விதிக்கப்படும் கட்டளைகள் மற்றும் திருத்தங்களுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

11.6. பயிற்சிக்கு இணைக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு பயிற்சி கல்லூரிகளில் தங்குமிட வசதிகள் வழங்குவதற்கு இந்த அமைச்சு கட்டுப்பட்டில்லை. அவ்வாறு வழங்கப்பட்டால் அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தங்குமிட அறைக்கான வாடகை, நீர் மற்றும் மின்சார கட்டணம் அறவிடப்படும்.

11.7. இப்பயிற்சிக் காலத்தினுள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அல்லது தனியார் சேவையில் ஈடுபடுவதற்கான எவ்வித உரிமைகளும் இல்லை.

11.8. பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு தொடர்பாக இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் உள்வாங்கப்பட்ட அல்லது உள்வாங்கப்படாத ஏதேனுமோர் விடயம் தொடர்பாக சிக்கல்கள் தோன்றினால், அது தொடர்பாக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித்தீர்மானமாகும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் முரண்பாடுகள் ஏற்படுமிடத்து, சிங்கள மொழியே வலுவில் இருக்கும்.

டாக்டர் அனில் ஜாசிங்க,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு.
“சுவசிறிபாய”
385, சங்கைக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு – 10,
2026.05.25.

05-445

---

**விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

**இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**

**இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை – 2026(II)**

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை 2026, யூலை மாதம் கண்டியில் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இதன் பொருட்டு கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் மூன்றாம் தரத்தில் உள்ள அலுவலர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. **பாடவிதானம்** : முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கு பொருத்தமான பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் 2013.12.13 ஆம் திகதிய இலக்கம் 1840/51 கொண்ட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.

வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளின் போது பாடங்களுக்கு அமர்கையில் ஒரே தடவையிலோ அல்லது அதற்கு மேற்பட்ட அமர்வுகளிலோ தோற்ற முடியும்.

03. இச்சேவையில் உள்ள அலுவலர்கள் I ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கு தோற்ற வேண்டிய பாடங்கள் பின்வருமாறு.

| *பாட இலக்கம்* | *வினாப்பத்திரம்* *பாடம்* | *நேரம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடைவதற்கான புள்ளி* |
|---|---|---|---|---|
| 01 | நிதி முறைமைகள் | 02 மணித்தியாலம் | 100 | 40 |
| 02 | நிருவாகம் | 02 மணித்தியாலம் | 100 | 40 |
| 03 | திணைக்களப் பிரமாணம் விணாப்பத்திரம் - 1 | 02 மணித்தியாலம் | 100 | 40 |
| 04 | திணைக்களப் பிரமாணம் விணாப்பத்திரம் - 2 | 03 மணித்தியாலம் | 100 | 40 |

04. பரீட்சைக்கான பாடப்பரப்பு

| *வினாப்பத்திரம்* | | *பாடப்பரப்பு* |
|---|---|---|
| *பாட இலக்கம்* | *பாடம்* | |
